விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

# வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Valampurii

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 07 வியாழக்கிழமை (24.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

## கல்வியமைச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் நடைபெறவுள்ள நிலையில்,

இதில் பிரதம விருந்தினராக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரிய



24ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை சட்ட விரோதமானது
## ஐ.நாவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு!

(கொழும்பு)

**இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சர்வதேச விசாரணை சட்ட விரோதமானதென்று தீர்ப்பளிக்குமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தேசப் பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகரவினால் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை சட்டவிரோதமானதென்று கூறிய மனுதாரர், இந்த விசாரணைகளில் கருத்துகளை முன்வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அவகாசம் வழங்கப்படவில்லை. எனவே, இந்த விசாரணை ஒரு தலைப்பட்சமானதென்று கூறிய அவர், இதன்மூலம் ஐ.நா. அமைப்பு இலங்கை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் பெரிய அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக இந்த மனு மூலம் குற்றம் சாட்டியுள்ளார்.


சட்டவிரோதமான விசாரணையொன்றை மேற்கொண்டமை சம்பந்தமாக இலங்கை மக்கள் உட்பட மனுதாரரிடம் ஐ.நா. அமைப்பு மன்னிப்பு கோரவேண்டுமென்ற உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு இந்த மனு மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அமைப்பினால் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்



கைகளுக்கு எதிராக உள்நாட்டு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. ஆனால், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான விசாரணை சட்டத்துகு அப்பால் சென்று மேற்கொள்ளப்பட்ட ஒரு விசாரணை என்று கூறிய வழக்கறிஞர் கபில கம்கே, அதற்கு எதிராக உள்ளூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியுமென்று கூறினார். இதேவேளை இந்த மனுவின் பிரதிவாதியாக ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி குறிப்பிடப்பட்டுள்ளார். (செ-12)

## சர்வதேச விசாரணையை வலியுறுத்திய கையொப்பங்கள்
### ஐ.நாவிடம் நேற்று கையளிப்பு




இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும் எனவும் இலங்கை அரசினால் உருவாக்கப்படும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் வெளிப்படுத்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுக்கும் அனுப்புவதற்காக திரட்டப்பட்ட கையொப்பங்களின் மூலப் பிரதிகள் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க

## பாலியல் துஷ்பிரயோகம்; சட்டமூலம் தொடர்பில் தெரிவுக்குழு நியமனம்

(கொழும்பு)


பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சட்டமூலம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியைக்கோரி நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தார். இந்த தெரிவுக்குழு தொடர்பான அமைச்சரவை அனுமதி நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது பெறப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் பெண்கள், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு

24ஆம் பக்கம் பார்க்க

## 25 கைக்குண்டுகள் மீட்பு



(கரணவாய்)

வீடொன்றில் இருந்து ஒரே சமயத்தில் 25 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 6.15 மணியளவில் மந்திகை வைத்தியசாலையிலிருந்து கொடிகாமம் செல்லும் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

குறித்த வீட்டில் நீர்க்குழாய் பொருத்துவதற்காக கிடங்கு வெட்டப்பட்ட போது மர்மப் பெட்டி ஒன்று இருப்பதை அறிந்த உரிமையாளர் பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பெட்டியிலிருந்து 25 கைக்குண்டுகளை மீட்டு அதனை பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12,50)

## கலப்பு நீதிமன்றம் உள்ளிட்ட 14 பந்திகளை நீக்க வேண்டும்
### இலங்கை அரசு கோரிக்கை

(ஜெனிவா)

அமெரிக்கத் தீர்மான வரைபில் இருந்து சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கும் பரிந்துரை உள்ளிட்ட 14 பந்திகளை நீக்க வேண்டும் என்று இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனிதவுரிமைகளை ஊக்குவிக்கும் 26 பந்திகளைக் கொண்ட அமெரிக்காவின் தீர்மான வரைபு தொடர்பிலான இரண்டாவது முறைசாராக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜெனிவாவில் இடம்பெற்றது.

ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கெயத் ஹாப்பர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுடன் ஜெனிவாவுக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி சமந்த ஜெயசூரிய மற்றும் வியன்னாவுக்கான இலங்கை தூதுவர் அசீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அமெரிக்காவின்

23ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றத்தாக்குதல்; 3 பேருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 23சந்தேகநபர்களில் 3 பேரை தலா 5 லட்சம் ரூபாய்பெறுமதியுடைய 3 ஆட்பிணையில் செல்லுமாறும் ஏனையவர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து
## வட பகுதி மீனவர்கள் நேற்றுப் பேரணி



(யாழ்ப்பாணம்)

"இந்திய அரசே எங்களை வாழவிடு" எனும் கோசத்துடன் வடபகுதி கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்தக் கோரி வடபகுதி மீனவர்கள் இணைந்து மிகப்பெரும் பேரணியொன்றினை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தனர்.

காலை 8 மணியளவில் பண்ணையில் ஆரம்பமாகிய பேரணி யாழ்.வைத்தியசாலை வீதியினூடாக

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி நேற்று அமெரிக்கா பயணம்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் 70 ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று புதன்கிழமை அமெரிக்கா பயணமானார்.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தொடரின் பொது விவாதத்தில் ஜனாதிபதி ஒரு விசேட உரையையும் நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி இவ்விஜயத்தின் போது மோல்டா நாட்டின் பிரதமர் கலாநிதி ஜோசப் மஸ்கட், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப், நியூ

24ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலைவாய்ப்பு

தேசிய அபிவிருத்தி லொத்தர் விற்பனையாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
**0755215200**

(1869)



## ஏல விற்பனை

எமது பாடசாலையின் பழுதடைந்த தளபாடமான "பாலர்கதிரை (மரம்)-05, கணனிக் கதிரை-02" என்பன 29.09.2015 அன்று காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே பெற விரும்புபவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(1872)

யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை
நீர்வேலி

அதிபர்



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



## க.பொ.த (உ/த) 2015 நாடகமும் அரங்கியலும் செயன்முறைப் பரீட்சைக்கான வழிகாட்டல் பயிற்சிநெறி

காலம்:- 26.09.2015 தொடக்கம்
30-09-2015 வரை

நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம்
மதியம் 12.00 மணி வரை

இடம்:- அரங்கச் செயற்பாட்டுக் குழு
இல.05, பழம் வீதி,
(பிள்ளையார் கோவில் அருகாமை)
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**கட்டணம் - 500 ரூபாய்**

(1875)

தொடர்புகளுக்கு : 0774403955


# கொக்குவிலில் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் மீது சரமாரியான வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

வாள்வெட்டு நடத்தியவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிளில் தப்பி வந்த இளைஞர் அதிக இரத்த போக்கு காரணமாக கொக்குவில் சந்திப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றின் முன்பாக விழுந்துள்ளார்.

அங்கிருந்தவர்களால் வாள்வெட்டுக்கு இலக்கானவர் மீட்கப்பட்டு ஆட்டோ ஒன்றின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.


அங்கு பொலிஸார் நடத்திய விசாரணையில் சம்பவ இடத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடித்திரிந்த ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் அரியாலை நாயன்மார்கட்டுப் பகுதியினைச் சேர்ந்த விதுஷன் (வயது 20) என்ற இளைஞரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

யாழ், சுன்னாகம் அதனை அண்மித்த பகுதிகளிலும் நடைபெறும் வாள் வெட்டுக் கலாசாரத்தினை தடுத்து குற்றவாளிகளை கைது செய்து பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி, பொலிஸாருக்கும் விசேட அதிரடி படையினருக்கும் உத்தரவிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மரண அறிவித்தல்

## இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை)** அவர்கள் 22-09-2015 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (அப்பாத்துரை) மனோன்மணி (பட்டு) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமித்துரை பிள்ளையம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (வசந்தி) யின் அன்புக் கணவரும் சுத்தானந்தன் (ஸ்ரீ), சந்திரலீலா, சந்திரமோகனா, சத்தியானந்தன் (ராசன்) சந்திரகாந்தா, கிருபானந்தன் (ஈசன்-பிரான்ஸ்) காலஞ்சென்ற சந்திரவசந்தியின் அன்புச் சகோதரனும், சாவித்திரி, செல்வராஜா, பத்மநாதன், தர்மலதா, கோபிநாதன், குமுதா, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விஜயலக்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உமாசுதன், கனேசுதன் (அவுஸ்திரேலியா), பிரமிளா (U.K), கஜிந்தா (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபா, ரதிவதனா (அவுஸ்ரேலியா) மதனசூரியா (U.K), பவிதீசன் (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷோத்ரா, யாதவி, டஸ்வின், ரேனுஜன், கிஷாரா, ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு அவரின் இல்லத்தில் 27-09-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று ஈமக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1871)

கோண்டாவில் மேற்கு,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 205 3142
077 981 4312

தகவல் :
குடும்பத்தினர்.


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்குஇலங்கையில்FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AFமட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ்(பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES&INTERNATIONAL DIPLOMAS(DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள்.யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

(1834)

ஆரம்பம் 26.09.15 உடன்அழைத்து பதியவும்...

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் →புகையிரதகடவை→AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

குறிப்பு : யாழில் பல பொய்களை கூறி மோசடி செய்வோரிடம் ஏமாந்த பலர் எமது AF க்கு வந்துள்ளனர் .நம்பிக்கை,கற்றல் கற்பித்தல் தரம்,சர்வதேச அங்கீகாரம் உள்ள எமது நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள்.வெளிநாடு ஒன்றில் இருக்கும்போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகிறோம். 021 222 8093


## அறிவித்தல்
### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் உப அலுவலகம் ஆனைக்கோட்டை
### ஆதனப் பெயர் மாற்றம்

**வட்டாரம் - 03**
**புதிய இலக்கம் - 14/10**
**கொத்தலாவள வாய்க்கால் வீதி,**
**கிராம அலுவலர் பிரிவு - ஜே/129 சுதுமலை வடக்கு**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் கிராம உப அலுவலகம் வட்டாரம் -03 கொத்தலாவள வாய்க்கால் வீதி ஆதன இலக்கம் 14/10 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "மலையான் தோட்டமும் கிழக்கு மலையான் தோட்டமும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 00.15 கொண்ட) இவ்வாதனம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த புவிராசா காஞ்சநாதன் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் கலாமன்ற வீதி மானிப்பாயைச் சேர்ந்த உதயகுமார் பெண் பரமபதி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 16205 ஆம் இலக்க 2015.06.21 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது (மானிப்பாய்) கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "மலையான் தோட்டமும் கிழக்கு மலையான் தோட்டமும்" நிலப்பரப்பு 03 குளி 00.15 கொண்ட குறித்த ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது உதயகுமார் பெண் பரமபதி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

(1870)

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்.

## சமையல் எண்ணெய் வரி அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெயக்கான வரி 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் எண்ணெய்க்கான விசேட பண்ட வரி 90 ரூபாயில் இருந்து 110 ரூபாயாக உயர்வடைந்துள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய எண்ணெய் உற்பத்தியாளர்களின் நலனுக்காகவே இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (செ-12)

## தீர்த்தோற்சவம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர நாதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோசவ திருவிழா இன்று இடம்பெறவுள்ளதுடன் நாளை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (செ)

## INVITATION TO BID
## DISTRICT SECRETARIAT, JAFFNA

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Region / Division/ Province | Bid No. / Item Description & Quantity | Bid closing date & Time | Procurement committee | Place of Purchase of Bidding Documents TP.Nos | Price of the Bid Document (Rs) | Value of Bid Bond (Rs) | Bids Should be deposited at | Bid will be Opened at | Price of the information copy (Rs.) | Type of Bid ICB/ NCB |
| District Secretariat, Jaffna | JK/ADM/11/CON.WORK/ ADM.BLOCK/LIFT Supply, Delivery and installation of 1 No.of 1000kg passenger lift to District Secretariat Jaffna | 12th October at 02.00 p.m | Departmental Procurement Committee | District Secretariat, Jaffna (T.PNo: 021222 2771) | 1000.00 | 120,000.00 | District Secretariat, Jaffna | District Secretariat, Jaffna | Nil | NCB |

(C-2285)

N.Vethanayahan
Government Agent / District Secretary,
Jaffna District.

# மகிந்தவை சர்வதேச விசாரணைக்குட்படுத்த முடியாது!

# இராணுவ அதிகாரிகளின் உத்தரவின் பேரில் போர்க்குற்றங்கள் நடைபெற்றிருக்கலாம்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை சர்வதேச விசாரணைக்குட்படுத்த முடியாது. போர்க்குற்றங்கள் மகிந்தவின் உத்தரவில் நடைபெற்றிருக்காது. இராணுவ உயர் அதிகாரிகளின் உத்தரவில் நடைபெற்றிருக்கலாம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



இந்திய தொலைக்காட்சி யொன்றிற்கு வழங்கிய செவ்வியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை மக்கள் மகிந்த ராஜபக்ஷவை போர் நாயகனாகவே கருதுகிறார்கள். அதனால் தான் அவருக்கு நாடு முழுவதும் ஆதரவு இருந்தது. இதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். குற்றங்கள் நடந்திருக்கலாம். என்னை பொறுத்தவரை போர்க்குற்றம் என்ற ஒன்று இல்லவே இல்லை. போரே குற்றம்தான். அதனால் தான் போருக்கு எதிரானவர்களாக நாங்கள் இருக்கிறோம்.

ஆனால், சில சூழல்களில் போர் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அல்கொய்தாவை ஒழிப்பதற்கு போர் ஒன்றே தீர்வு என்பதை நாங்கள் ஏற்கிறோம். தலிபானை அழிப்பதிலும் போரைத் தவிர வேறு வழியில்லை. இறுதிக்கட்டத்தில் தமிழ் விடுதலைப்புலிகள் இயக்கத்தை பொறுத்தவரையிலும் அதே நிலைதான் ஏற்பட்டது. முந்தைய கட்டத்தில், அன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசின் நல்லிணக்கம் மற்றும் அமைதி முயற்சிகளை விடுதலைப் புலிகள் தடுத்து, ரணிலை வீழ்த்த மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்தார்கள். ஆக விடுதலைப்புலிகள் போரையே விரும்பியதை காட்டுகிறது. அவர்கள் அமைதியை விரும்பவில்லை.

போர்க்குற்றங்கள் எல்லாம் மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிந்துதான் நடந்தது என்று எப்படி சொல்ல முடியும்? படைகளின் தலைவர் ஜனாதிபதி தான். ஆனால், அவர் நாட்டின் தலைவரும் கூட. ஏதோ சில படைப் பிரிவுகளின் தளபதிகள் போர்க்குற்றத்தில் ஈடுபட்டிருந்தால், ஜனாதிபதிக்கு எப்படித் தெரிந்திருக்கும்? சித்திரவதை மையங்களை சிலர் நடத்தியிருந்தால், ஜனாதிபதிக்கு சொல்லித்தான் செய்திருப்பார்கள் என்று கூறமுடியுமா? முடியாது. ஒரு பெரிய போர் நடக்கும்போது அந்நாட்டில், இதுபோன்ற எல்லா தகவல்களையும் ஜனாதிபதி அறிந்து வைத்திருக்க முடியுமா?

ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை போன்று நடந்திருக்கலாம். ஆனால், ஜனாதிபதி உத்தரவிட்டு அவை நடந்திருக்கும் என கூறமுடியாது. இராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கலாம்.

எனவே எந்தவிதமான சர்வதேச விசாரணைக்கும் மகிந்த ராஜபக்ஷவினை உட்படுத்த முடியாது. நான் ராஜபக்ஷவுக்கு ஆதரவானவன் இல்லை. அவரை பல வகைகளில் எதிர்ப்பவன் நான். ஆனால், அவரை எந்தவிதமான சர்வதேச விசாரணைக்கும் உட்படுத்த முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வெலேசுதாவுக்கு அடுத்த மாதம் தீர்ப்பு

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையாளரான வெலேசுதா என்ற கம்பொல வித்தானகே சமன் குமாரவிற்கு எதிரான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலேசுதா 2008 ஆம் ஆண்டு கல்கிஸை பிரதேசத்தில் 7.05 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில், குறித்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி வழங்கப்படும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார். (இ-7)

## ஆஸி. சுற்றுலாப் பயணி சடலமாக நேற்று மீட்பு

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் அவுஸ்திரேலிய சுற்றுலா பயணி ஒருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலிய சுற்றுலாப் பயணி, இரண்டு நாட்களாக தங்கியிருந்த கொழும்பு ஹோட்டல் அறையில் இருந்து வெளியில் வராத நிலையில், பொலிஸாரால் சோதனையிடப்பட்டுள்ளது.

சோதனையின் போது இறந்த நிலையில், பயணி கிடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜி.எஸ்.பி. வரிச்சலுகையினை மீண்டும் பெற்றுக் கொடுப்பதாக ஜேர்மன் உறுதி



(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக்கொடுப்பதாக ஜேர்மன் நேற்று முன்தினம் உறுதி வழங்கியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து உரையாற்றிய போதே இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

தாம் மீண்டும் ஜேர்மனுக்கு சென்று இந்நாட்டின் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து ஜி.எஸ். பி.பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிராங்வோல்டர்ஸ்டெயின்மியர் கூறியுள்ளார். (இ-7)

## பிரதமர் ரணிலை புறக்கணிக்கும் வடமாகாண சபை உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் புறந்தள்ளியுள்ளனர்.

எங்களை மதிக்க தெரியாதவர்களை நாம் சந்திக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் பட்டதாரிகள் குறித்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை எம்மால் அணுகமுடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு பட்டதாரிகள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அவசர விண்ணப்பக் கடிதம் ஒன்றை அனுப்புவது என முடிவெடுக்கப்பட்டது.

இதன்போது எமது கோரிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன் வைக்கலாம். பிரதமர் எங்களை மதிப்பதில்லை. நாம் அவரிடம் செல்வதால் பயனில்லை. நாமும் அவரை மதிக்கத்தேவையில்லை எனக் கருத்துக்களைமுன்வைத்தனர்.

இதேவேளை வடக்கு முதல்வருடன் தான் ஒரு போதும் கதைக்கமாட்டேன். அவர் பொய்யர் என இந்திய ஊடகம் ஒன்றுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேட்டியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாக பா.கஜதீபன் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரே மேற்படி கருத்தை முன்வைத்துள்ளனர். (இ-4)

## இராணுவச் சிப்பாய் தூக்கிட்டு தற்கொலை

நொச்சியாகம, வில்பத்து இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இராணுவ முகாமிற்கு 700 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள மரமொன்றில் நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட படை வீரரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவச் சிப்பாய் கடந்த 21ஆம் திகதி நொச்சியாகம படைமுகாமிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பதவிய பிரதேசத்தைச் சேர்ந்த கோப்ரல் ஒருவரே உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)



கனடா உயர்ஸ்தானிகராலய அரசியல் ஆலோசகர் ஜெனிபர் ஹர்ட், இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ஐக்கிய இராச்சியத்தின் ஆலோசகர் போல்ஹொட்பிரி ஆகியோர் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனை நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். யாழ்.மாவட்டத்தில் கனடா அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் அபிவிருத்திகள் தொழிற்பயிற்சி மற்றும் யாழ்.மாவட்டத்தின் தேவைகள் தொடர்பாக அரச அதிபருடன் கலந்துரையாடினார். (படம்: பெ.சோபிகா)

## தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்ட வீடுவீடாகச் செல்ல ஐ.தே.க. தீர்மானம்

தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் வீடு வீடாக செல்ல ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

தேசிய அரசாங்கம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் இந்த திட்டத்தை முன்னெடுக்க உள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் தொடர்பில் மக்களை முழுமையாக தெளிவுபடுத்துவதன் மூலம் எதிர்கால திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியும் என சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வேட்பாளர்களில் 25 வீதமான வேட்பாளர்களாக பெண்களை நிறுத்துவது என தீர்மானிக்கப் பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரியும் பொறுப்பு பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களிடம் ஒப்படைப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படாத உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 9 நிமிடத்தில் 5 கோல்கள் புதிய சாதனை படைத்த வீரர்



ஜேர்மனியில் நடைபெறும் கிளப் கால்பந்தாட்ட போட்டியில், போலந்து வீரர் 9 நிமிடத்தில் 5 கோல்கள் அடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

ஜேர்மனியில் பண்டேஷ்லிகா கால்பந்தாட்ட போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் பேயர்ன் மியுனிச்(Bayern Munich) அணியில போலந்து வீரர் ரொபர்ட் லெவான்டவுஸ்கி (Robert Lewandowski) விளையாடி வருகிறார்.

இவர் வுல்ப்ஸ்பர்க் (Wolfsburg's) அணிக்கு எதிரான ஆட்டத்தில் 9 நிமிடத்தில் 5 கோல்கள் அடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

லெவான்டவுஸ்கி களமிறங்கிய போது அவரது அணி 0-1 என்ற கணக்கில் பின் தங்கி இருந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் வுல்ப்ஸ்பர்க் அணி 1-0 என்ற கணக்கில் முன்னணியில் இருந்தது.

2-வது பாதி ஆட்டத்தில் தியாகோவுக்கு பதிலாக மாற்று வீரராக களமிறங்கிய லெவான்டவுஸ்கி, 51-வது நிமிடத்தில் முதல கோல் அடித்தார்.

தொடர்ந்து 52, 55, 57 மற்றும் 60-வது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் அடித்து சாதனை படைத்தார்.

அதுமட்டுமின்றி வெறும் 4 நிமிடங்களில் ஹாட்ரிக் கோல் அடித்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## இந்தியாவிடம் கெஞ்ச மாட்டோம் பாகிஸ்தான் எச்சரிக்கை

கிரிக்கெட் போட்டிக்காக இனிமேலும் இந்தியாவிடம் கெஞ்ச மாட்டோம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் ஷகாரியார் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் நடப்பாண்டு முதல் 2023-ம் ஆண்டு வரை ஆறு சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் விளையாட இந்திய கிரிக்கெட் சபை ஒப்புக்கொண்டது.


இந்நிலையில் இந்திய எல்லைப் பகுதியில பாகிஸ்தானின் தொடர் அத்துமீறல் காரணமாக இந்தியா, பாகிஸ்தான் அணியுடன் விளையாட மறுத்து விட்டது.

மேலும், இந்திய எல்லைப் பகுதியில் தாக்குதலை நிறுத்தினால் மட்டும்தான் உங்களுடன் கிரிக்கெட் விளையாடுவது பற்றி யோசிக்க முடியும் என்று இந்திய கிரிக்கெட் சபை திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

கிரிக்கெட் தொடருக்காக இந்தியாவிடம் நாங்கள் இனி கெஞ்ச மாட்டோம். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) கவனத்துக்கு கொண்டு செல்வோம்.

இந்தியாவுடனான போட்டி நடைபெறாமல் போனால் நாங்கள் மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவித்துள்ளார். (க)

# விவசாயி குடும்பத்தை தத்தெடுத்தார் சானியா



தெலுங்கானா பிரதம மந்திரியின் மகளும், எம்.பியுமான கவிதா தெலுங்கானா ஜாக்ருதி அமைப்பின் தலைவராகவும் உள்ளார்.

வறுமை காரணமாக ஏராளமான விவசாயிகள் தற்கொலை செய்துள்ளதால் அவர்களது குடும்பத்தை காக்க அக்குடும்பங்களை வசதியுள்ளவர்கள் தத்தெடுக்கும் திட்டத்தை கவிதா தொடங்கியுள்ளார்.

இந்த திட்டத்தின்படி தெலுங்கானாவை சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தற்கொலை செய்த விவசாயிகளின் குடும்பத்தை தத்தெடுத்துள்ளார்.

இதேபோல அம்மாநிலத்தை சேர்ந்த பட்மிண்டன் வீராங்கனை ஜுவாலா கட்டா, கிரிக்கெட் வீரர் ஓஜா ஆகியோரும் தத்தெடுத்துள்ளனர்.

இதுவரை 80 விவசாய குடும்பங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளன. ஜாக்ருதி அமைப்பு இவர்களுக்கு மாதம் தோறும் ரூ.5 ஆயிரம் வழங்கி வருகிறது.

தெலுங்கானா மாநிலத்தின் விளம்பர தூதராக உள்ள சானியா மிர்சா ரூ. 3 லட்சமும், ஜுவாலா கட்டா ரூ. 10 லட்சமும், ஓஜா ரூ. 2 லட்சமும் நன்கொடை வழங்கியுள்ளனர்.(க)

# உலக கிண்ண போட்டியில் துயரமான கணங்கள் ஏற்பட்டன

## குமுறுகிறார் டி வில்லியர்ஸ்



உலகக்கிண்ண போட்டியில் தென்னாபிரிக்க அணி சந்தித்த தோல்வி குறித்து டி வில்லியர்ஸ் தற்போது கூறியுள்ளார்.

கிரிக்கெட் ஆட்டத்தில் சிலதில் வெற்றியும் சில தில் தோல்வியும் ஏற்படுவது சகஜமானதுதான்.

ஆனால், நடந்து முடிந்த உலகக்கிண்ண போட்டியில் சில துயரம் தரும் கணங்கள் ஏற்பட்டன.

ஆனால் எங்களிடம் நல்ல அதிர்வு இருந்தது. நாங்கள் கடைசி நேரத்தில் பலவீனமடைபவர்கள் அல்ல. நாங்கள் சில அபாரமான கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தினோம்.

எங்களுக்கும் அரையிறுதியில் வாய்ப்பு கிடைத்தது. துரதிர்ஷ்டவசமாக நாங்கள் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அந்த நாளில் எங்களை விட சிறந்த கிரிக்கெட்டை நியூஸிலாந்து அணியினர் ஆடியதற்கு நாம் பாராட்டுகளை தெரிவிப்பதுதான் முறை என்று கூறியுள்ளார். (க)

# சென்னை ஓபன் டென்னிஸில் வாவ்ரிங்கா பங்கேற்கிறார்

பிரபல ஏடிபி டென்னிஸ் தொடரான சென்னை ஓபன் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி தொடங்கி 10-ம் திகதி வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் பங்கேற்பதை நடப்பு சம்பியனான ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா (சுவிஸ்) நேற்று முன்தினம் உறுதி செய்தார்.

நுங்கம்பாக்கம் எஸ்டிஏடி டென்னிஸ் அரங்கில் நடைபெற உள்ள இந்த தொடரில், 2014 மற்றும் 2015-ல் தொடர்ச்சியாக சம்பியன் பட்டம் வென்று அசத்திய வாவ்ரிங்கா மீண்டும் களமிறங்க உள்ளார். சென்னை ஓபனில் ஹாட்ரிக் சாதனை படைக்கும் முனைப்புடன் உள்ள வாவ்ரிங்கா, உலக தரவரிசையில் 4-வது ரேங்க் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இதுவரை ஏடிபி அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகளில் 8 முறை கோப்பையை கைப்பற்றியுள்ளார். 2014-ம் ஆண்டு அவுஸ திரேலியன் ஓபன், 2015-ல் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்று சாதனை படைத்த இவர், சென்னை ஓபனில் பங்கேற்க இருப்பது குறித்து நேற்று முன் தினம் கூறியதாவது,

கடந்த 2 ஆண்டுகளாக சென்னை ஓபனில் சம்பியன் பட்டம் வென்றது, ஆஸி. ஓபன்



மற்றும் பிரெஞ்ச் ஓபனில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்வதற்கும் அடித்தளமாக அமைந்தது.

8-வது ஆண்டாக இத்தொடரில் பங்கேற்க இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இம்முறையும் சம்பியன் பட்டத்தை வென்று ஹாட்ரிக் சாதனை படைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இது போன்ற அற்புதமான தொடரை நடத்துவதற்காக, ஒருங்கிணைப்பாளர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு வாவ்ரிங்கா கூறியுள்ளார். (க)

# வட்டுவாகல் உதயசூரியன் வி.கழக உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று

முல்லைத்தீவு வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின இறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சிலாவத்தை இளம்பறவை அணியும் முள்ளியவளை வித்தியா அணியும மோதவுள்ளன. இரு அணிகளும் சமபலம் பொருந்திய அணிகளாக விளங்குவதனால் போட்டி பரபரப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை நடைபெற்றுவந்த கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மாத்தளன் அம்பலவன் பொக்கணை ஒற்றுமை விளையாட்டுக்கழக ஏ,பி சகோதர அணிகள் மோதவுள்ளன.

இறுதிப்போட்டிகளுக்கு முன்பாக உதயசூரியன் அணியினரின் காட்சி உதைபந்தாட்டமும் கராட்டிக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எம்.றெஜினோல்ட் மற்றும் மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-302)

# இலங்கையும் இந்தியாவும் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த நடவடிக்கை



இந்தியாவும் இலங்கையும் தமக்கிடையிலான பாதுகாப்பு உறவை விரிவுபடுத்திக் கொள்ள இணங்கியுள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான மூன்று நாட்கள் பாதுகாப்பு மாநாடு நேற்று முன்தினம் டில்லியில் முடிவடைந்தது. இந்த மாநாட்டில் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராட்சி உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

இந்திய பாதுகாப்பு செயலாளர் ஸ்ரீ ஜி மோகன்குமாரின் அழைப்பின்பேரிலேயே அவர் உள்ளிட்ட குழுவினர் இந்தியாவுக்கு சென்றிருந்தனர்.

2012ஆம் ஆண்டில் இருந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் வருடந்தோறும் பாதுகாப்பு மாநாடு நடைபெற்று வருகிறது.

பிராந்தியத்தின் பாதுகாப்பு அமைதி மற்றும் உறுதித்தன்மை என்பவற்றுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் பேசப்பட்டுள்ளது.

இராணுவப் பயிற்சிகள், கடல்பாதுகாப்பு ஒத்துழைப்பு, கடற்படை கப்பல்களுக்கான விநியோகம் போன்ற விடயங்களும் இதன்போது பேசப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் தமது இந்திய விஜயத்தின் போது இந்திய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இந்திரராவ் இந்திரஜித்சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் கே டோவால் ஆகியோரையும் சந்தித்து உரையாடியுள்ளார். (இ-7)

# புலிகள் சம்பந்தமாக பேசியதால் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன்

## பினாங்கு முதல்வர் இராமசாமி

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களுக்கு அரசியல் வகுப்பு எடுப்பதற்காக என்னை அழைத்தார்கள். அதற்காக, ஏழு முறை ஈழத்துக்குச் சென்றிருக்கிறேன். விடுதலைப்புலிகள் சம்பந்தமாகப் பேசி வந்ததாலேயே பேராசிரியர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டேன் என மலேசியாவின் பினாங்கு மாநில துணை முதல்வர் இராமசாமி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவரான இராமசாமி, மலேசிய பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியராகப் பணியாற்றியவர். அவர் தமிழக சஞ்சிகையான ஜூனியர் விகடன் இதழில் வெளிவரும் கழுகார் பதில்கள் பகுதியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

**கேள்வி**-விடுதலைப் புலிகளுக்கு அரசியல் ஆலோசனைகள் சொல்பவராக இருந்திருக்கிறீர்கள். அந்த அனுபவங்களைச் சொல்லுங்கள்?

பதில் - விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களுக்கு அரசியல் வகுப்பு எடுப்பதற்காக என்னை அழைத்தார்கள். அதற்காக, ஏழு முறை ஈழத்துக்குச் சென்றிருக்கிறேன். புலித்தேவன் உட்பட பல மூத்த தலைவர்கள் அந்த வகுப்புகளில் கலந்துகொ ண்டனர். ஒரு விவாதம் போல அதை நடத்தினோம்.

அப்போது, புலிகளின் தலைமைச் செயலகத்துக்கும் சென்றிருக்கிறேன். தலைவர் பிரபாகரனை சந்தித்து இருக்கிறேன்.

ஒருமுறை தலைவருடன் அவரது மகன் பாலச்சந்திரனை பார்த்தேன். ரொம்ப புத்திசாலித்தனமான சிறுவன். துறுதுறுவென்று அங்குமிங்கும் ஓடித்திருந்த காட்சிகள் இன்னும் என் மனக்கண்ணைவிட்டு அகலவில்லை.

விடுதலைப்புலிகள் சம்பந்தமாகப் பேசி வந்ததாலேயே பேராசிரியர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டேன்.

**கேள்வி** - நீங்கள் இந்தியாவுக்கு வர தடை விதிக்கப்பட்டதற்கு என்ன கார ணம்? யார் காரணம்? இப்போது தடை நீக்கப்பட்டு தமிழகம் வந்துளளதை எப்படி உணர்கிறீர்கள்?

பதில் - 5 ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் பேசினேன். அப்போது, தி.மு.க ஆட்சி நடந்தது. பதவி அதிகாரத்தில் இருந்ததால் ஈழத்தமிழர்களை அவர்கள் காப்பாற்றியிருக்கலாம். ஆனால், காப்பாற்றவில்லை. அது எனக்கு மிகப் பெரிய வேதனையாக இருந்தது.

எனவே, கருணாநிதியை விமர்சித்தேன். பிரதமர் மன்மோகன் சிங்கையும் விமர்சித்தேன். தமிழர்களின் பிரச்சினைகளைப் பேசியதற்காக, இந்திய அரசு எனக்குத் தடை விதித்தது. அதில், கருணாநிதிக்கு முக்கிய பங்கு உண்டு. கடந்த 5 ஆண்டுகளாக என்னால் தமிழ்நாட்டுக்கு வரமுடியவில்லை.

கடந்த ஆண்டு பினாங்கில் தமிழர்களுக்கான ஒரு மாநாட்டை நடத்தினேன். அதற்கு வைகோவை அழைத்திருந்தோம்.

இந்தியாவுக்கு வர எனக்கு விசா மறுக்கப்பட்ட விவகாரம், அப்போதுதான் வைகோவுக்குத் தெரியவந்தது. அதை அறிந்து கோபப்பட்டார். மகிந்த ராஜபக்ஷவுக்கெல்லாம் வரவேற்பு கொடுக்கிறார்கள். எங்கள் மண்ணின் மைந்தரான இராமசாமி வரக்கூடாது என்றால், அதைவிட கொடுமை இருக்க முடியாது.

தடையை உடைத்து, அடுத்த ஆண்டே உங்களை நான் தமிழ்நாட்டுக்கு அழைத்துச் செல்வேன். இது சபதம்' என்று அங்கு வைகோ பேசினார். அந்த சபதத்தை வைகோ இப்போது நிறைவேற்றிவிட்டார். அதற்காக அவர் எடுத்த முயற்சிகள் சாதாரணம் இல்லை. எனக்காக, பிரதமர் மோடியையே நேரில் சந்தித்தார்.

பிரதமரை சந்தித்த பிறகும், அவர் எடுத்த கடும் முயற்சிகளுக்குப் பிறகே என் மீதான தடை நீக்கப்பட்டது. வைகோ போன்றவர்கள் தலைமை தாங்கவேண்டும். அதுதான், தமிழ்நாட்டுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களுக்கான விடிவுகாலத்தை உருவாக்கும் என்றார் இராமசாமி. (இ-7)


## பெயர் மாற்றம்

மணற்புலம் அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட ஆனந்த பாஸ்கரன் சுவந்தி ஆகிய நான் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் சுமதி என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
(1866) சுமதி.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**சிவராசா தேவராணி**
(சின்னமணி)

பிறப்பு 02.07.1945 — இறப்பு 25.08.2015

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டுள்ள போது உதவிகள் புரிந்த யாழ் போதனா வைத்தியசாலையின் பணியாளர்களுக்கும், தொலைதூரங்களிலிருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் போசனம் அளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (24.09.2015) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

15/2, முருகேசர் வீதி,
நல்லூர்.
(சி-2283)

தகவல்
குடும்பத்தினர்



## பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
71 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- பிள்ளையார் இன் மண்டபம் (Pillaiyar Inn)
இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
காலம்:- சனிக்கிழமை, 26 ஆம் திகதி செப்டெம்பர் 2015
நேரம்:- காலை 09.30 மணி

தயவுகூர்ந்து தங்கள் தேசிய அடையாள அட்டையை கொண்டு வரவும்.
(1853)

இல.530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

R.சபேசன்
காரியதரிசி.


## ராசி பலன்

24.09.2015
(புரட்டாதி 07, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
ஏகாதசி மாலை 5.59மணிவரை
திருவோணம் பின்னிரவு 2.06மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம்<br>மேல் நோக்கு நாள் | | சுக் |
| சந் | | | குரு<br>செவ்<br>புத |
| | சனி | | ராகு<br>சூரி |

**மேடம்**: புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு.

**இடபம்**: குடும்பத்தில் நிலவிவந்த மனஸ்தாபங்கள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**: கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், தேக நலனில் கவனம் எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்**: நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்**: பகைவர்கள் விலகுவர், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் போட்டிகள் மாறும், கௌரவமான நாள்.

**கன்னி**: நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரிய மொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக நிலையுண்டு.

**துலாம்**: செல்வாக்கு அதிகரிக்கும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் நன்மையுண்டு, வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரும் நாள்.

**தனுசு**: நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**மகரம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்**: உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


**மீனம்**: அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# எங்கள் குழந்தைகளுக்கு எதிரான ஈனச்செயல்கள்தான் இலங். அரசை உலகின் முன் தலைகுனிய வைத்துள்ளது

## நாகர் கோவிலில் முதலமைச்சர் எடுத்துரைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**எங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்திய கொடூரமான, மனிதத் தன்மையற்ற, இரக்கமற்ற ஈனச் செயல்களே இன்று இலங்கை அரசாங்கத்தை உலக அரங்கிலே தலைகுனிய வைத்துள்ளது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் புக்காரா விமானங்கள் கோரக் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட 21 குழந்தைகளின் 20 ஆவது சிரார்த்ததினமும் நினைவுத் தூபி திறப்பும் நேற்று முன்தினம் இடம் பெற்ற போது இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று ஒரு துன்பகரமான தினம். இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடசாலையில் நடைபெற்ற துன்ப நிகழ்வுகளின் வடுக்கள் இன்னமும் நீங்காத நிலையில் பலர் வாடிக் கொண்டிருப்பதை நான் அறிவேன். இன்றைய இந்த நினைவுத்தூபி திறப்பு விழா நிகழ்விற்கு என்னை வட மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் அழைத்திருந்தார்கள்.

நாகர் கோவில் பகுதிக்கு வருவது மனமகிழ்ச்சியைத் தரும் விடயம். ஆனால் இந்த சிரார்த்த தினத்தில் இப்பாடசாலைக்கு வருவதற்குக்கால்கள் பின்னடித்தன. உங்கள் சோகக்கதைகள் மனதை வாட்டுகின்றன. என்றாலும் பறிகொடுத்த நெஞ்சங்களுக்குப் பக்கத்தில் இருந்து ஆறுதல் கூறலாம் என்றே இந்த நிகழ்வில் கலந்து கொளள உடனே முடிவெடுத்தேன்.

இயற்கை எழில் கொஞ்சும் இந்த நாகர்கோயில் கிராமத்தில் கடற்றொழிலையும் விவசாயத்தையும் நம்பி வாழ்கின்ற எம்மக்கள் சூதுவாது அறியாதவர்கள். பெரும்பாலானோர் கடல் அன்னை குறையாது வழங்கும் மீன் வளத்தின் மூலமாக நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வந்தவர்கள். நாகர் கோவில் நாகதம்பிரானின் அருளைப் பெற்றிருந்தவர்கள். எந்தவொரு கவலையும் இன்றி வாழ்ந்த இவர்களுக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட துன்ப துயரம் அவர்களின் அடிப்படை அத்தபாரத்தையே ஆட்டங் காண வைத்துவிட்டது.

1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று இந்துக்களின் புனித நாளான வெள்ளிக்கிழமை. மங்கள ஓசைகளுடன் புதிதாய் மலர்ந்த அந்தத்தினம் சகலர் மனதிலும் கனமான ஒரு துயரத்தை தரப் போகின்றதென்பதை அறியாத எமது பிஞ்சுக் குழந்தைகளும் ஆசிரியர்களும் அவ்வாரத்தின் இறுதி நாளாகிய அந்த வெள்ளிக்கிழமையன்று பாடசாலையை நோக்கிச் சென்றனர். வகுப்புக்களும் உற்சாகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மதிய இடைவேளைக்குப் பின்னர் 12.30 மணிக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறைகளுக்குச் சென்ற பின்னரே அக் கொடிய புக்காரா விமானங்கள் வட்டமிடத் தொடங்கின.

சுமார் 875 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த இப்பாடசாலை மீது புக்காரா விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பிள்ளைகள் பயப்பீதியில் அங்குமிங்கும் ஓடத் தொடங்கினர். பாடசாலை அதிபரோ "ஒருவரும் வெளியே போகாதையுங்கோ, பாடசாலைக்குள்ளேயே நில்லுங்கோ" என்று கூச்சலிட்டவாறு மாணவர்களை அடக்கி ஓரிடத்தில் இருத்தத் தெண்டித்தார். ஆனால் மாணவர்களோ அதிபரின் சொல்லைக்காதில் வாங்கிக் கொள்ளாது அருகாமையிலிருந்த புளியமரம் மற்றும் ஆத்திமரத்தின் கீழ் பதுங்கினர். அடுத்தடுத்து வீசப்பட்ட குண்டுகளின் மூலம் அப்பிஞ்சுகளை மொத்தமாய் 21 பிள்ளைகளை நாம் கண நேரத்தில் பறிகொடுத்தோம். இத்துயர சம்பவம் எங்கள் அனைவரதும் இரத்தங்களை உறையவைத்தது. அழகிய வண்ணாத்திப்பூச்சிகள் போல அங்குமிங்கும் பறந்து திரிந்த இக்குழந்தைகளை கண்ணிமைக்கும் நேரத்தில் தசைக்குவியல்களாய் தரையில் இறைத்துவிட்டுச் சென்றன இந்தப் புக்காரா விமானங்கள்.

விமானம் வெடிகுண்டு வீசிய அன்றையதினத்தில் இருந்து இக்கிராமமே சோக மயமாகியது. எங்கும் அவலக்குரல்! மக்கள் இந்தக் கிராமத்தில் தொடர்ந்து சீவிக்க வழிதெரியாது அயற் கிராமங்களை நோக்கி நகர்ந்தனர். இப் பாடசாலையின் அதிபராக அக்காலத்தில் கடமையாற்றிய மகேந்திரன் கடுமையான மனவுளைச்சல காரணமாக ஒரு நோயாளியாக மாறியிருந்தார் என அறிகின்றேன். இவ்வாறு பலவழிகளிலும் பாதிப்புற்ற இக்குடும்பங்கள் ஏன், எதற்கு அல்லது எவ்வாறு இவ் அவலங்கள் தமக்கு ஏற்பட்டதென்பதற்கு இன்னமும் விடை தெரியாது கலங்கி நிற்கின்றன.

நாகதம்பிரான் மீது அதீத பற்றுக் கொண்டவர்கள் இப்பகுதிமக்கள் என்று அறிகின்றேன். நோய்வாய்ப்பட்டாலோ அல்லது பாம்பு கடித்தாலோ வைத்தியசாலைக்குச் செல்லமாட்டார்கள் என்று அறிகின்றேன். பதிலாக நாகதம்பிரான் ஆலய முன்றலில் வந்து தங்கி அங்கே வழங்கப்படுகின்ற விபூதியை உடலில் பூசியும் அக் கோவிலின் மூலஸ்தானத்தில் இருந்து பெறப்படுகின்ற நாமத்தை கடி வாயில் பூசியும் தீர்த்தத்தை அருந்தியும் தமது நோய்களை குணப்படுத்திக் கொள்வார்கள் என்றும் கூறக் கேட்டுள்ளேன்.

நம்பிக்கை மிகுந்த இந்த மக்களுக்கு இப்படியான ஒரு சோகம் ஏற்பட்டதே என்று மனம் வருந்துகின்றது. இறந்தவர்கள் போக எஞ்சிய மாணவர்களும் கடுமையான மன விரக்திக்கு உட்பட்டு பய உணர்ச்சியுடையவர்களாகவே இன்னும் காணப்படுவதாக கூறப்படுகின்றது. எம் மக்களை கடந்த கால அதிர்ச்சிகள் எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றன என்பதை நாங்கள் இது வரையில் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தறிய முற்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளை எமது பல்கலைக் கழகமும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தாரும் சம்பந்தப்பட்ட வைத்தியர் குழாமும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். போரானது ஒன்றுமே அறியாத 21 பிள்ளைகளை காவுகொண்டமை எம்மனதைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றது. இந்தப் பிள்ளைகளின் பெற்றோரை எப்படி ஆறுதல்படுத்துவது எனறு புரியவில்லை. இப் பிள்ளைகள் அகாலத்தில் இறந்து சில நாட்கள் வரையில் இப்பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் குழந்தைகளின் அழுகைச் சத்தம் கேட்ட தாகவுங் கூறப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-60)




# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமை மற்றும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை என மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. கல்லூரியில் குமாரசாமி மண்டபத்தில் தினமும் நிகழ் வுகள் இடம்பெறவுள்ளதோடு காலை, மாலை என இரு அமர்வுகளாகவும் இடம் பெறவுள்ளன.

இதற்கமைய காலை அமர்வு 8 மணிக்கும் மாலை அமர்வு மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள முதலாம் நாள் அமர்வு காலை 8.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் தயானந்தராஜா தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் 125 ஆவது ஆண்டு நிறைவு நினைவு தபால் தலை வெளியீடு செய்து வைக்கப் படவுள்ளது. தொடர்ந்து 125 ஆவது ஆண்டு நினைவு மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

இதனை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு நம்பிக்கை நிதியத்தலைவருமான விகயிலாசபிள்ளை வெளியிட்டு வைக்கவுள்ளார்.

நூல் முதற்பிரதியினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பெற்றுக்கொள்வதுடன் சிறப்புபிரதிகளை கல்லூரியின் முன்னாள் அதிபர்கள் அ.சிறிக்குமாரன், வீ.கணேசராஜா ஆகியோர்பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

இதனைத்தொடர்ந்துமாலை நிகழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தலைவர் முந அசோகன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதியின் முன்னாள் மேலதிக செயலாளருமான கலாநிதி வி.அம்பலவாணர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

# மணல் பகிரங்க ஏல விற்பனை

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு தொகுதி மணல் நாளை மறுதினம் 26ஆம் திகதியன்று மு.ப.10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளது.

மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகள் அனைத்தும் பணமாகவே செலுத்தவேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் ஏலத்தில் மணலை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும் என யாழ்.நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-9)

# நூல் வெளியீட்டுவிழா

வி.பிரகலாதன் ஆசிரியரது உருவாக்கத்தில் தரம் 10 இற்குரிய வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அராலி மத்தி கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் தலைவர் ச.மோகனதாசன் தலைவராக பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் கணக்கியல்துறைத் தலைவர் எஸ்.பாலபுத்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய வணிகத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.உதயகுமார் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக யாழ். சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையினை அராலி தறணன் முருகன் ஆலய பிரதம குரு தி.சர்வேஸ்வரகுருக்கள் வழங்கவுள்ளதுடன் தலைமையுரையினை அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தலைவர் ஸ.மோகனதாசன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையினை அராலி ஸ்ரீமுருகன் சனச மூக நிலைய போஷகர் இ.வசந்தனும் ஆய்வுரையினை யாழ். வட்டு இந்துக் கல்லூரியின் ஆசிரியர் இ. கைலைவாசனும் வழங்கவுள்ளதுடன் ஏற்புரையினை நூலாசிரியர் வி.பிரகலாதன் வழங்கவுள்ளார்.

நூலின் முதற் பிரதியினை எஸ்.மோகனதாசனும் இரண்டாம் பிரதியினை எஸ்.சச்சிதானந்த ஐயாவும் மூன்றாம் பிரதியினை வ.நிர்மலனும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (இ-5)






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் இந்து நடைபவனி நேற்றையதினம் நடைபெற்றது. கல்லூரி வாசலில் இருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பித்த இந்த நடைபவனியில் தமிழர் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கரகாட்டம், மயிலாட்டம், மானாட்டம், மாட்டுவண்டில் சவாரி என்பன பவனியாகவும் அதனை தொடர்ந்து பாடசாலையில் உள்ள விளையாட்டுக்கள், பாடப்பிரிவுகள், குழுக்கள், சங்கங்கள் என்பனவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வாகனங்களில் சுலோகங்கள் கட்டப்பட்டும் அலங்கரிக்கப்பட்டும் சென்றனர். இந்த நடைபவனி பாடசாலை வாயிலில் ஆரம்பித்து கே.கே.எஸ். வீதியூடாக சத்திரச் சந்தி வரை சென்று யாழ். ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதி, வேம்படி வீதி, பலாலி வீதி ஊடாக நல்லூர் பின் வீதியை அடைந்து பின்னர் கல்லூரி மைதானத்தை வந்தடைந்தது. இப்பவனியில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)





# மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியலுக்கு அப்பால் சென்று நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்திய-இலங்கை அரசுகளிடம் கோரிக்கை

**வடக்கு கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களினை இனியும் அனுமதித்தால் எங்களின் சாத்வீக போராட்டம் கண்டனப் போராட்டமாக மாற்றமுறும். எங்கள் வாழ்வாதாரத்தை இந்திய- இலங்கை அரசுகள் கவனத்திலெடுத்து அரசியலுக்கு அப்பால் சென்று நடவடிக்கையெடுக்க வேண்டுமென வடக்கு மீனவர் கள் இலங்கை மற்றும் இந்திய அரசுகளிடம் கோரியுள்ளனர்.**

இந்தியமீனவர்களின்அத்துமீறலை கண்டித்து நேற்று யாழில் நடைபெற்ற மாபெரும் பேரணியின் முடிவில் யாழ்.இந்திய துணைத் தூதர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.நீரியல் கடற் றொழில் திணைக்கள பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டு ள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் யுத்தம் முடிவடைந்து 6 வருடங்களாகியும் இன்னமும் யுத்தவலிகளில் இருந்து மீளாது வாழ்கின் றனர். யுத்தம் நிறைவடைந்து ஏதோ ஒரு வழியில் தமது மீன்பிடித் தொழிலை ஆரம்பித்த மீனவர்களு க்கு இன்னமும் பல இடையூறுகள் காண ப்படுகின்றது.

1.யுத்தத்தினால் தொழில் உப கரணங்களை இழந்தவர்களுக்கு இன்னமும் சரியான முறையில் தொழில் உபகரணங்கள் வழங்கப் படாமை.

2.மண்ணெண்ணெய் மானியம் அரைகுறையாக இருந்த போதும் அந்த மானியம் வழ ங்குவதில் வருடக் கணக்கில் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றமை.

3.கடற்றொழில் திணைக்களங்களால் மண்ணெண்ணெய் மானிய பதிவு மேற்கொள்ளப்படாத பலர் தவறவிடப்பட்டுள்ளமை.

4.மீனவர்கள் அநேகருடைய காணிகள் இன்னமும் விடுவிக்கப்ப பாமல் அதியுயர் பாதுகாப்பு வலய த்துக்குள் காணப்படுகின்றமை.

மேற்கூறப்பட்ட பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்து சிறிய அளவில் தமது தொழிலைக் கட்டி எழுப்புகின்ற மீனவர்களுக்கு இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக நுழையும் இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் பெரியளவிலான பிரச்சினையாகும்.




வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய யாழ். மாவட் டத்திலுள்ள இடங்களில் இந்திய இழுவைப் படகுகளின் தாக்கம் மிக மோச மானதாக வுள்ளது. இதற்கு மப்பால் மன்னார் மாவட்டம், கிளிநொ ச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இந்திய இழுவைப் படகுக ளின் தாக்கம் மிக மோசமாக வுள்ளது. ஆயிரத்தில் இருந்து ஆயிரத்து 500 அளவிலான இந்திய இழுவைப் படகுகள் வாரத்தில் மூன்று நாட்கள் (திங்கள், புதன், சனி) ஆகிய தினங்களில் யாழ். மாவட்டக் கடலை ஆக்கிரமித்து எமது வாழ்வாதாரத்தை வாரிச் செல்வது மல்லாமல் வலை கள்மற்றும் உபகரணங்களை நாசம்செய்து விட்டு செல்கின்றன. இரண்டு படகுகள் ஒன்றாக இணைந்து இர ட்டை மடிகளை (Pair draw Net) (அதாவது அகன்ற மடிக ளைக் கொண்ட வலைகள்) பயன்படுத்துகின்றனர். அடி த்தளம் முதல் கடலின் மேற் பரப்பு வரையுள்ள மீன்களை அள்ளக்கூடியதாக காணப்படுவதால் பெறுமதிமிக்க இறால், நண்டு, கணவாய், கடலட்டை, சங்கு, குஞ்சு மீன் கள் சிறிய அளவில் குஞ்சுகளாக இருக்கும் பொழுதே அழிக்கப்படுகின்றது அதேவேளை இன்னும் பல முக்கியமான மீன் இனங்கள் இந்திய இழுவைப் படகுகளினால் வாரி அள்ளிச் செல்லப்படுகின்றது.

சென்ற காலங்களில் இலங்கை, இந்திய அரசுகளின் ஒருங்கிணைந்த கூட்டங்களிலும் இந்திய அரசின் ஆலோசனைக்கு இலங்கை அரசு பணிந்து செயற்பட்டதே தவிர, தனது பக்கம் எந்தவிதமான ஆலோசனைகளையும் முன் வைத்ததாக தெரியவில்லை. சமீபத்தில் எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்தபோதும் கூட இந்திய பிரதமர் நரேந்திர மோடியவர்கள் இந்திய மீனவர்களுடைய வாழ் வாதாரம் பற்றிப் பேசும் போது இந் திய மீனவர்களைவிட பன் மட ங்கு வாழ்வாதார சிக்கல்களிலிருக்கும் இலங்கையின் வடபுலத்து மீன வர்களுடைய வாழ்வாதாரம் பற்றி எமது பிரதமர் வாய் திறக்காது ஏன் மௌனித்திருந்தீர் என்ற கேள்வி எழுகிறது.



இந்திய இழுவைப்படகுகளின் சட்டவிரோத நுழைவையும் அதனால் ஏற்படுகின்ற தாக்கத்தையும் முள்ளிவாய்க்காலில் இருந்து நொந்து நூலாகி வெறுமனே வந்த தாம் இதுவரை காலமும் இந்திய, இலங்கை அரசுகளை நம்பி பொறுமை காத்து வந்தோம். இனியும் பொறுமை காப்போமாயிருந்தால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறி யாகின்ற அதே சந்தர்ப்பத்தில் எமது பின் சந்ததியின் வாழ்வாதாரமும், வாழ்வியலும் கேள்விக் குறியாகும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது.



எனவே எமது வாழ்வாதாரம் மேம்படுவதோடு எமது சந்ததியின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய இறையாண்மையுள்ள எமது அரசு என்ற வகையில் இலங்கை அர சிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து இதனை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துகின் றோம்.



1.சட்டவிரோதமாக இலங்கைக் கடல் எல்லைப்பரப்புக்குள் நுழைகின்ற இந்திய இழுவைப் படகுகளை அரசுடைமையாக்குதல்.

எல்லைதாண்டி வருகி ன்ற இந்திய இழுவைப்படகு களில் வரும் மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையை வழங்கி இதனூடாக இந்திய இழுவைப் பட குகளின் வருகையைத் தடுப்பதற்கு வழிவகுத்தல்.



இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் தொடர்ந்து காண ப்படுமாயின் இலங்கை முழுக் கடற் பரப்பிற்குப் பாரிய பிரச்சினை உருவாகும். எனவே இக்கார ணியைத் தீர்ப்பதற்கு சிறந்த சட்டம் 1982 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட சமுத் திர சட்டம் பயன் தரும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை என அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள் ளது.

இம் மகஜரினை வடமாகாண கடற்றொழிலாளர் இணையம், யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், யாழ்.மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து வழங்கியிருந்தன. (இ-4)

# சட்டவிரோதமாக தொழில்நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் உள்ளூர் மீனவர்களையே முதலில் கட்டுப்படுத்த வேண்டும்

**வடக்கு மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

எங்களது கடல் வளத்தைப் பாதுகாப்பதற்கு எமது மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி முறையை முதலில் நிறுத்தவேண்டும் என வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மீன்பிடி அமைச்சர் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகளை தடை செய்யக்கோரியும் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்தும் மீனவ அமைப்புக்கள் இணைந்து யாழில் நடத்திய போராட்டத்தை நான் வரவேற்கிறேன். நல்ல நோக்கத்திற்காக நாம் மேற்கொள்ளும் நடவடிக்கை சரியாக வழிநடத்தப்பட வேண்டும். சரியான தலைமையின் கீழ் வழிநடத்தப்பட வேண்டும்.

சில இடங்களில் எமது நகர்வுகள் பிழையாக இருந்த காரணத்தால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினை குறித்து சரியானதொரு தீர்மானம் பெறுவதற்கு நான் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன். ஜனாதிபதியுடனும் மீன்பிடி அமைச்சருடனும் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் எமது மாகாணத்தில் உள்ள அனைத்து மீனவ சங்கங்கள், சமாசங்கள் மற்றும் அமைப்புக்களிடம் இருந்து அவர்களின் நிலைப்பாடு தொடர்பாக 6 விதமான கேள்விகளை கேட்டிருந்தேன். அதற்கான பதிலை எழுத்துருவில் தருமாறு கோரியிருந்தேன்.. ஆனால் இதுவரை எந்த அமைப்புகளும் தமது நிலைப்பாட்டை எனக்கு அறியத்தரவில்லை. மன்னாரில் உள்ள ஒரு மீனவ சங்கம் மட்டுமே எனக்கு அவர்களுடைய கோரிக்கைகளை அனுப்பியிருந்தனர்.

மீனவ சங்க நிர்வாக உறுப்பினர்கள் அசமந்த நிலையில் இருக்கின்றார்கள். எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஒன்றாகச் செயற்படவேண்டும். அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

இந்திய இழுவைப் படகை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால் எமது கடல் வளத்தை பாதிப்பதில் எமது மீனவர்கள் செயற்படுவது கண்டிக்கத்தக்க விடயம்.

சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபடும் எமது மீனவரை தண்டனையில் இருந்து பாதுகாக்க எமது மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இவ்வாறு செயற்படுவதால் எமது எதிர்கால சந்ததியினர்தான் பெரும் பாதிப்பிற்கு உள்ளாவார்கள்.

எனவே எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும். அந்த வகையில் வடமாகாணத்தில் உள்ள அனைத்து மீனவ அமைப்புக்களையும் அழைத்து மீண்டும் இந்த அறிவித்தல்களை வழங்கி மீனவ சமூகத்தினரின் பிரச்சினைக்கு தீர்வு பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# எல்லை தாண்டிய மீன்பிடியை கட்டுப்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுங்கள்

## முல்லை. மீனவர்கள் சிவமோகனிடம் எடுத்துரைப்பு

(பனிக்கன்குளம்)

தென்னிலங்கை மீனவர்களினாலும் இந்திய மீனவர்களினாலும் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றால்சிறந்த தீர்வு கிடைக்கும் வரை மக்களையும் மீனவர்களையும் இணைத்து தொடர்போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென்னிலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்கள் ஆகியோரினால் எல்லை தாண்டிய சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையினாலும் தமது தொழில் பாதிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு முல்லைத்தீவு மீனவர்கள் கொண்டு வந்தனர்.



இதனை அடுத்து முல்லைத்தீவு பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் நேரடியாகச் சென்று மீனவர்களுடன் அண்மையில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடல்வளத்தை சட்டவிரோதமாகவும், தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தியும் நீண்டகாலமாக தென்னிலங்கை மீனவர்களின் கடல் வளத்தை சூறையாடுவதாகக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன்,

இந்த விடயம் தொடர்பாக கடந்த கால ஆட்சியாளர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கடந்தகால அரசினால் எந்தவித தீர்வும் எடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர், மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதிப்பது போன்று இந்திய மீனவர்களின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாகவும் கவலை தெரிவித்தார்.

இதனால் கடற்றொழிலையே நம்பி வாழும் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளதாகவும், புதிய அரசாங்கம் இந்த விடயத்தினை கவனத்திற் கொண்டு அத்துமீறல், சட்டவிரோதமான மீன்பிடிகளில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களையும், இந்திய மீனவர்களையும் கட்டுப்படுத்தி மீனவர்களின் தொழில் மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் ஏற்படும் பட்சத்தில் தீர்வு கிடைக்கும் வரை மக்களையும் மீனவர்களையும் இணைத்து தொடர் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (2-281)

## குடும்பஸ்தரை போத்தலால் தாக்கிய நபருக்கு விளக்கமறியல்

(வவுனியா)

வவுனியா, நேரியகுளம் பரண தொடுவாய் பகுதியில் குடும்பஸ்தரை போத்தலால் தாக்கிய நபரை, விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்ற நீதவான் கடந்த 21 ஆம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நேரியகுளம், பரணதொடுவாய் பகுதியில் வசிக்கும் இரு குடும்பத் தலைவர்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மது போதையில் இருந்த நபர் மற்றவரை போத்தலால் தாக்கியுள்ளார்.

இது தொடர்பில் போத்தலால் தாக்கிய நபர் வவுனியா, செட்டிகுளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (2)




## கடல்வாழ் உயிரினங்களை பாதுகாப்பதன்மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை வளப்படுத்த முடியும்

### கிளி.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

எமது மாவட்டத்தில் உள்ள கடற்பகுதிகளில் கடல் வாழ் உயிரினங்களை பாதுகாத்து கொள்வதன் மூலம் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சிறப்பாக கொண்டு செல்லமுடியும் என கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடற்கரை சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையும் ஜனாதிபதி செயலகமும் இணைந்து செயற்படுத்தும் கரையோரச் சூழலை பாதுகாக்கும் வகையிலான சிரமதானப்பணிகளின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான பிரதான நிகழ்வு பூநகரி பள்ளிக்குடா கடற்கரையோரப்பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் தெரிவித்த அவர்,

வடக்குமாகாணத்தில் கடற்கரையோரப் பகுதிகளே பிரதானமாக காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டம் சுமார் 127 கிலோ மீற்றர் கரையோரப்பகுதிகள் கொண்டதாக காணப்படுவதுடன் மாவட்டத்தில் உள்ள 95 கிராம அலுவலர் பிரிவுகளில் 28 கிராம அலுவலர் பிரிவுகள் கடற்கரையோரப்பகுதிகளை கொண்ட பகுதிகளாக காணப்படுகின்றது.

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பிரதான வாழ்வாதாரமாக விவசாயம் காணப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாக கடற்றொழில் காணப்படுகின்றது.

இந்நிலையில் தற்போது கடற்கரைகள் மாசடைந்து வருகின்றன. அதாவது பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல்கள் கண்ணாடிப் போத்தல்கள் போன்ற கழிவுகள் இங்கு வீசப்படுகின்றன. இவை உக்கி அழிவதற்கு பல நூறு ஆண்டுகள் எடுக்கும். இதனால் கடற்கரையோரங்களை பாதுகாக்கும் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாத்துக்கொள்வதன் மூலம் கடற்றொழிலை வாழ்வாதாரத்தொழிலாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். கடற்பாசிகள் போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகப்பெரும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கும் இளைஞர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிகமிக அவசியமாக வுள்ளது. அத்துடன் எமது மாவட்டம் ஓர் சுற்றுலாத்துறையை நோக்கி நகர வேண்டியுள்ளது. இதனால் கரையோரப் பகுதிகளும் ஏனைய பகுதிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

## கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு உலக வங்கி பிரதிநிதிகள் வருகை



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி பொதுச் சந்தையின் இரண்டாம் கட்ட கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கிப் பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு வருகைதந்து சந்தை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகளிடம் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் 10 மில்லியன் ரூபா செலவில்இரண்டாம்கட்ட கடைத் தொகுதிகள் அமைத்துத் தருவதாக கூறியுள்ளார்கள்.

அத்துடன் சந்தை வளாகத்தையும் அவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர்.

மக்களின் மீள்குடியமர்விற்கு பின்னர் மீன் மற்றும் மரக்கறி கடைத்தொகுதிகள் அமைக்கப்பட்டு வியாபாரிகளிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-277)



கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமண மண்டபம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது... (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## நோய்கள் தொடர்பான கருத்தரங்கும் நடமாடும் ஆய்வுகூட பரிசோதனையும்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற கல்வி அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான தொற்றாநோய் நாட்பட்ட சிறுநீரக நோய், பாலியல் தொற்று நோய்கள் உட்பட நோய்கள் தொடர்பான கருத்தரங்கும் நடமாடும் ஆய்வுகூட பரிசோதனையும் நேற்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை துணுக்காய் கல்வி வலய ஒன்றுகூடல் மண்டபத்தில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெற்றது.

இதில் துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற 60 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர். (2-15)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் வணிகக்கல்வி, விவசாய மும் உணவுத் தொழில்நுட்பம், மனைப் பொருளியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், செயல்முறை தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான பாடரீதியான செயலமர்வு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாகாண தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (2-15)

# "சிறுமியர், பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்து"

## முல்லைத்தீவில் கண்டனப் பேரணி







(முல்லைத்தீவு)

சிறுமியர், பெண்கள் ஆகியோருக்கு எதிரான பாலியல் வன்முறைகள், பால்நிலை வன்கொடுமைகளைக்கண்டித்தும், வித்தியா, ஜெருஷா, சேயா ஆகியோர் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு நீதி கோரியும் பெண்கள், சிறுமியர்களுக்கான பாதுகாப்பை வழங்கக் கோரியும் முல்லைத்தீவில் கண்டனப்பேரணியொன்று நடத்தப்பட்டது.

இந்தக் கண்டனப்பேரணி நேற்று காலை முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டத்தின் பல்வேறு பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், தாய்மார் பெண்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் அண்மை வாரங்களில் இத்தகைய பாலியல் வன்முறைகள் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டியுள்ள பெண்கள் அமைப்பினர், மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் துறை அலுவலகங்கள், வேலைத்தளங்கள், கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களிலும் பெண்களினதும் சிறுமியர்களினதும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக்கோரியும் முல்லைத்தீவு மாட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர். (2-4-281)




# சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் மூலிகைக் கிராமத்தில் நடைபெறும்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் வழிகாட்டலில் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை கிளிநொச்சி கல்மடு நகரிலுள்ள மாகாண மூலிகை கிராமத்தில் பார்வையிட முடியும்.

இந்நிகழ்விற்கு வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன, வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ். பளிஹக்கார, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சுதேச மருத்துவம் சார்ந்த காட்சிப்படுத்தல் பகுதியில் பாரம்பரிய மருத்துவத்தினைப் பிரதிபலிக்கின்ற மருத்துவ உற்பத்திகள், ஏட்டுச்சுவடிகள், புராதன உபகரணங்கள் சித்த மருத்துவம் தொடர்பான பிரணாம வளர்ச்சி வரலாற்று அணுகுமுறைகள், தொழில்நுட்ப அபிவிருத்தி ஊடாக சுதேச மருத்துவத்தின் அபிவிருத்தி, உணவுப் பழக்க வழக்கங்களில் பாரம்பரிய வைத்தியமுறைகள், நோயாளிகளின் நலன்களில் மணி, மந்திர, ஔடத சோதிட சாஸ்திரங்களின் பங்கு, பஞ்ச கர்ம வாத ரோக முறிவு நெறிவு மற்றும் அக்குபஞ்சர் போன்ற பாரம்பரிய சிறப்பு வைத்தியங்கள் பாரம்பரிய வைத்திய முறைகளில் சிறப்பு வைத்திய நிபுணர்களின் நிபுணத்துவம் ஆகியவை காட்சிப்படுத்தப்படும்.

மூலிகைத் தோட்டக் காட்சிப்படுத்தல் பகுதியில் மாதிரி மூலிகைத் தோட்டம், மாதிரி வீட்டுத் தோட்டம், அரிய மூலிகைகளின் அறிமுகம், வர்த்தக நோக்கிலான மூலிகைகளின் உற்பத்தி, வடக்கு மாகாண சுதேச மருத்துவ உற்பத்திப் பிரிவின் மருந்து, மருந்துசார் உற்பத்திகளின் விற்பனை, அன்றாட வாழ்வில் பயன்படும் மூலிகைகளினதும் மூலிகை விதைகளினதும் விற்பனை, பாரம்பரிய மருத்துவ நூல்களின் விற்பனை என்பன காட்சிப்படுத்தப்படும்.

எனவே சுதேச மருத்துவ ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# பிராந்திய பொலிஸ்மா உள்ளிட்ட ஐந்து பேருக்கு விளக்கமறியல்



(குருமன்காடு)

வவுனியா குடாகச்கச்ச கொடி பகுதியில் புதையல் தோண்டுவதற்கு உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் வவுனியா, மன்னார் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் யூ.கே.திஸ்ஸநாயக்கா உள்ளிட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சந்தேக நபர்களை நேற்று காலை வவுனியா மாவட்ட நீதிமன்றில் பலத்த பொலிஸ் பாதுகாப்பிற்கு மத்தியில் முற்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கினை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிபதி வி. இராமக்கமலன் பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வர்ரை விளக்கமறியலில் வைத்து விசாரணை செய்ய உத்தரவிட்டார். புதையல் தோண்டுவதற்கு உடந்தையாக செயற்பட்ட குற்றச்சாட்டில் பிரதி பொலிஸ்மா அதிபர் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# ஆசிரியர்களுக்கான கர்நாடக சங்கீத புதிய பாடத்திட்ட அறிமுக செயலமர்வு

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தரம்- 7, தரம்-11 ஆகிய வகுப்புகளில் கர்நாடக சங்கீத பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கர்நாடக சங்கீத புதிய பாடத்திட்ட அறிமுக செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் மகரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெறுமென மத்திய கல்வி அமைச்சின் அழகியல் துறைப்பாட செயல் திட்டத் தலைவர் ஞானஸ்ரீபிகமகே அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தரம் -7, தரம்-11 ஆகிய தரங்களில் கர்நாடக சங்கீதப் பாடத்தில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் இது தொடர்பான செயலமர்வு வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் மேற்படி தரங்களில் கர்நாடக சங்கீதப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் ஒரு தொகுதியினருக்கு செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-15)

# கிளி.மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள், பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்



(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டத்தை அடுத்த வருடத்திற்குள் இறுதி வடிவமாக்குதல் என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தேசிய நல்லிணக்க, ஒருமைப்பாட்டுக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சி.மாலியத்த கலந்துகொண்டார்.

அதன்போது மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள், தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் வீதி, மின்சாரம், கல்வி, மருத்துவம், விவசாயம், பொது வசதிகள், நீர்ப்பாசனம், உள்ளூராட்சி, கைத்தொழிற்துறை, விளையாட்டுத்துறை, கைத்தொழில்துறை, கலாசாரம் மற்றும் காணி என்பன உள்ளிட்ட துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் வட மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், மாகாண மற்றும் மாவட்ட அரச உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (2-281-15)

# மன்.பொது வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி


(பனிக்கன்குளம்)


மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை ஜனராஜ சுகாதார சங்கத்தின் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் சுகாதார சிற்றூழியர்கள் இணைந்து அண்மையில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர் ஈட்டன் பிரீஸ் தலைமையில் குறித்த சிரமதானம் இடம்பெற்றது.

சிரமதானப் பணியில் இலங்கை ஜனரஜ சுகாதார சங்கத்தின் மாவட்ட கிளையின் தலைவர் எஸ்.எச்.எம்.இல்ஹாம் மற்றும் உறுப்பினர்கள், சுகாதார சிற்றூழியர்கள், சாரணர்கள் என பலர் கலந்து கொண்டு டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)





சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முன்னாள் முகாமையாளர் இந்து போர்ட் சு.இராசரத்தினத்தின் 131 ஆவது பிறந்த தின நிகழ்வு அண்மையில் கலாசாலை வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நடைபெற்றது.இதன்போது சங்கத்தின் செயலாளர் தி.செல்வமனோகரன் இந்து போர்ட் சு.இராசரத்தினத்தின் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் இராசரத்தினத்தின் மகள் திருமதி. திலகவதி மாணிக்கவாசகருக்கு இல்லக விளக்கு மலர் முதற்பிரதி வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட சங்கத்தின் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை, சிறப்பு விருந்தினர்களையும் படங்க்ளில் காணலாம்.





சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்மன் மீது பாடப்பட்ட ஈழவாரியம்பதியுறை தாயே எனும் இசை இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் ஆலயத்தில் அமைக்கப்பட்ட விசேட அரங்கில் நடைபெற்ற போது...




புலோலி வடமேற்கு காந்தியூர் கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள்-கரணவாய் செய்தியாளர்)




யாழ்.வட்டுக்கோட்டை சூறட்டிப்பனை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அன்னதான மண்டபத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்

ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம் கடந்த 10 ஆண்டு காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. யாழ். மாநகர முன்னாள் உறுப்பினர் மா.கனகரத்தினத்தின் முயற்சியால்வடமாகாணஆளுநர் மேற்படி சனசமூக நிலையத்தை இராணுவத்தினரிடமிருந்துமீளப்பெற்றுக்கொடுத்துள்ளார். சனசமூக நிலைய அண்மையில் மீளத் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர்,மாதர்சங்கத்தலைவி, ஜே/78 கிராம சேவையாளர் மற்றும் வாசக ர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




நல்லூர்க்கந்தன் மஹோற்சவகால பெருந்திருவிழாவை முன் னிட்டு நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற கந்தபுராணத் தெய்வீகத்தொடர் இசைப்பேருரையினை நிகழ்த்திய கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது......

# எல்லை தாண்டும் மீனவர்களை இனிமேல் யாரும் தாக்கக்கூடாது

## டில்லியில் நடந்த கூட்டத்தில் முடிபு

**இந்திய - இலங்கை கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க வரும் இரு தரப்பு மீனவர்களை இருநாட்டு கடற்படையோ, கடலோரக் காவல் படையோ தாக்கக்கூடாது என்று டில்லியில் நடைபெற்ற இரு நாடுகளின் பாதுகாப்புத்துறைச் செயலர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

"இந்திய - இலங்கை பாதுகாப்பு பேச்சுவார்த்தை எனும் பெயரில் இரு நாடுகளின் பாதுகாப்புத் துறைச் செயலர்கள், முப்படைகளின் தளபதிகள், கடலோரக் காவல் படை உயரதிகாரிகள் பங்கேற்ற உயர்நிலைக் குழுக் கூட்டம் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது.

முதல் நாள் கூட்டத்தில் இரு நாடுகளிடையிலான இராணுவ ஒத்துழைப்பு, ஆயுதங்கள் கொள்முதல், பயிற்சியை விரிவுபடுத்துதல் ஆகியவை தொடர்பாக அதிகாரிகள் குழு ஆலோசனை நடத்தியது. இதில், இலங்கை முப்படையினருக்கு இந்திய இராணுவக் கல்லூரிகளில் இடங்களை அதிகரிப்பது, நவீன ஆயுதங்கள் பயிற்சி அளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நேறறு முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் கூட்டத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு, அமைதி நிலவ இரு நாடுகளின் பாதுகாப்புப் படைகளும் இணைந்து ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற இந்திய கடலோரக் காவல்படை அதிகாரிகள், இந்திய கடல் எல்லையைத் தாண்டும் தமிழக மீனவர்கள் உள்ளிட்டோர் மீது இலங்கை கடற்படை, கடலோரக் காவல் படை வீரர்கள் நடத்தும் தாக்குதல்கள் குறித்து பிரச்சினை எழுப்பினர்.

அப்போது, கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை கடலோரக் காவல் படை ஏற்றிருப்பதால், இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் மீனவர்களை விரட்டி அடிக்க சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், மீனவர் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகும்படி தங்கள் நாட்டுப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டுள்ளதாகவும் அந்நாட்டு கடலோரக் காவல்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து, இந்திய பாதுகாப்புத் துறைச் செயலர், இலங்கை பாதுகாப்புத் துறைச் செயலர் ஆகிய இருவரும் தனியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், மீனவர்கள் பிரச்சினை குறித்து விரிவாக விவாதித்தனர்.

பேச்சுவார்த்தை குறித்து இலங்கை பாதுகாப்புத் துறை உயரதிகாரி கூறியதாவது,

மீனவர்கள் விவகாரத்தை, வாழ்வாதாரப் பிரச்சினையாக அணுகி மனிதாபிமானத்துடன் அவர்களை நடத்தும்படி இரு தரப்பு கடலோர காவல் படைகளும் பரஸ்பரம் கேட்டுக் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து, கடல் எல்லையைத் தாண்டும் மீனவர்களை எக்காரணத்தைக் கொண்டும் தாக்கக் கூடாது. அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்வதைத் தவிர்க்க இரு தரப்பிலும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இரு நாட்டு கடலோரப் பகுதிகளில் மீனவர் கள் பிடிபட்டால் அவர்கள் மீது அந்தந்த நாட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

அதுவும் இரு நாட்டு அரசுகளின் அரசியல் முடிவுகளுக்கு உட்பட்டது என்றும் அதிகாரிகளிடம் பாதுகாப்புத் துறைச் செயலர்கள்விளக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குளிரூட்டியில் இருந்த தாஜுடீனின் உடற் பாகங்களைக் காணவில்லை?

ரகர் வீரர் வசிம் தாஜுடீனின் உடல் பாகங்களைக் காணவில்லை என புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள வசீம் தாஜுடீனின் சடலத்திலிருந்து முன்னதாக பெற்றுக்கொள்ளப்பட்ட உடல் பாகங்களைக் காணவில்லை என தகவல்கள் கிடைத்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸிடம் தெரிவித்துள்ளனர்.

தாஜுடீனின் சடலத்தை முதலில் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்திய முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர, உடல் பாகங்களை குளிரூட்டியில் சேமித்து வைத்திருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், உடல் பாகங்களை ஒப்படைத்தமை குறித்து எவ்வித ஆவணங்களும் இல்லாத காரணத்தினால் உடல் பாகங்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை என பிரதான சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி நாரஹேன்பிட்டிய சாலிகா வீதியில் வாகனமொன்றில் எரியுண்ட நிலையில் தாஜுடீனின் சடலம் மீட்கப்பட்டது.

முன்னதாக இந்த மரணம் ஓர் விபத்து என விசாரணைகளின் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், தற்போது இந்த மரணம் ஓர் திட்டமிட்ட கொலை என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக பிரேதப் பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரியிடம் சடலத்தின் எக்ஸ்ரே படம் இருப்பதாகவும் இதனை புதிதாக பிரேதப் பரிசோதனை செய்யும் குழுவிடம் ஒப்படைக்குமாறும் தற்போதைய சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன் கோரியுள்ளார்.

எக்ஸ்ரே படம் மற்றும் முன்னதாக பரிசோதனைக்கு உட்படுத்திய உடற் பாகங்கள் பற்றிய தரவுகளையும் உள்ளடக்கியே இறுதி அறிக்கையை தயாரிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார் என புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக முனனதாக பிரேதப் பரிசோதனை நடத்திய வைத்தியர் குழாமில் அங்கம் வகித்த டாக்டர் ராஜகுரு, உடற்பாகங்களை பாதுகாப்பாக பேணுமாறு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவிடம் கோரியிருந்தார் என புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சிறையில் இருந்து கொண்டே பிரிகேடியரான ராணுவ சாரதி

### இலட்சக்கணக்கில் பணம் மோசடி

(கொழும்பு)

வெலிக்கடை சிறையிலடைக்கப்பட்டுள்ள இராணுவ சாரதியொருவர் தான் இராணுவத்தின் ஓய்வு பெற்ற பிரிகேடியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு சிறையில் இருந்தவாறே இலட்சக்கணக்கில் பணம் மோசடி செய்துள்ளார்.

இந்த மோசடி விவகாரத்தில் இராணுவ சாரதியின் காதலியும் உடநதையாக இருந்துள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வார இறுதி சிங்கள பத்திரிகைகளில் வெளிநாடுகளில் பாதுகாப்பு சேவை வெற்றிடங்கள் இருப்பதாகவும், வெளிநாடுகளில் நடைபெறவுள்ள படப்பிடிப்புகளுக்கு நடிகர், நடிகைகள் தேவை என்றும் விளம்பரங்கள் செய்து மோசடி செய்வது இவரகளின் வழக்கமாக இருந்துள்ளது.

விளம்பர நடவடிக்கைகள் மற்றும் வங்கிக்கொடுக்கல் வாங்கல்களை இராணுவ சாரதியின் காதலி ஒருங்கிணைத்துள்ளார். இதற்காக சிறையில் இருக்கும் தனது காதலனின் தொலைபேசி இலக்கத்தையும் அவர் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

இவர்களது விளம்பரங்களை நம்பி தொடர்பு கொள்ளும் ஓய்வுபெற்ற இராணுவத்தினரிடம் சிறையில் இருந்தவாறே சட்டவிரோத தொலைபேசி பாவனை ஊடாக உரையாடும் இராணுவ சாரதி தன்னை ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியராக அறிமுகப்படுத்திக் கொண்டு ஏமாற்றி பணம் பறித்துள்ளார்.

படப்பிடிப்பு தொடர்பான விளம்பரங்களைக் கண்டு தொடர்பு கொளவோரிடம் தான் திரைப்பட இணை இயக்குநர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு பணம் பறித்துள்ளார்.

தற்போது இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து பொலிஸார் புலனாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

## இணையத்தளம் ஊடான ஒருங்கிணைப்பு செயற்றிட்டத்தில் அரச வைத்தியசாலைகள்

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



(கொழும்பு)

இணையத்தளம் ஊடான ஒருங்கிணைப்பு வலையமைப்பின் கீழ் அரசாங்க வைத்தியசாலைகள் உள்வாங்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, தற்போது அரசாங்க வைத்தியசாலைகள் அனைத்தும் ஒரு வலையமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக இணையத்தள வலையமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக ஒருங்கிணைக்கப்படும் வைத்தியசாலைகள் தங்களுக்குள் தேவையான தகவல்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் கையிருப்பு குறித்த தகவல்களை இலகுவாகப் பரிமாறிக் கொள்ள முடியும்.

மேலும் ஒரு வைத்தியசாலையில் மருந்துப் பொருள் ஒன்று தீர்ந்துபோகும் பட்சத்தில் அதன் அருகில் உள்ள வைத்தியசாலையில் குறித்த மருந்துப்பொருள் கையிருப்பில் உள்ளதா என்பதை இலகுவாக அறிந்து கொண்டு, பரிமாறிக் கொள்ளவும் இந்த வலையமைப்பினூடான ஒருங்கிணைப்பு நடவடிக்கை பெரிதும் துணையாக அமையும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:31 செவ் 7 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:NCT/ அரச தொழில்<br>தொ.இ: B/4977 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 40 செவ் 1 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2204 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 62சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4978 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 11 1/2சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BBA/கணக்காளர்<br>தொ.இ: G/2219 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSC IT/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4979 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 67 செவ் 8 இல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்:BFA/அரசதொழில்<br>தொ.இ: G/2231 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 42செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:HNDA, PGD/ அரசதொழில்<br>தொ.இ: B/4983 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 13சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/2259 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )

# சைபர் தாக்குதலை சீனா நிறுத்த வேண்டும்

## அமெ.பாதுகாப்பு ஆலோசகர் சூசன்னா றைஸ் எச்சரிக்கை



**சீனாவின் திட்டமிட்ட சைபர் தாக்குதல் தொடர்பாக அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன்னா றைஸ் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

சைனாவின் ஆதரவுடன் நடத்தப்படும் இந்த் சைபர் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது என்பதால் அமெரிக்க - சீன உறவில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அது ஆத்திரமூட்டும் சிறு விடயமல்ல. இது பொருளாதார மற்றும் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம். இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் சீன ஜனாதிபதி ஆகியோர் பேச்சுக்களை நடத்த வேண்டும். சீன ஜனாதிபதி அமெரிக்காவுக்கு இந்த வாரம் விஜயம் செய்யும் போது இது தொடர்பாக பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இது இரு நாடுகளுக்குமான உறவில் மிகவும் முக்கியமான விடயமாகும். இதனை கண்டுகொள்ளாமல் விட்டு விடமுடியாது என்றார்.

ஆனால் இது தொடர்பாக சீன ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்

சீன அரசாங்கம் வாணிப இரகசியங்களை களவெடுக்க வேண்டிய தேவையே இல்லை என்று தெரிவித்துள்ளார். அத்துடன் வாணிப இரகசியங்களைத் திருடுதல் மற்றும் அரசின் இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்துதல் இரண்டும் சட்டவிரோதமானதாகும். இவை கிரிமினல் குற்றங்களாகும். அத்துடன் இவை தண்டிக்கப்பட வேண்டியவை.

சைனாவும் பிரித்தானியாவும் இது விடயத்தில் பொதுவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (3-7)




# பலி எண்ணிக்கை 117

(மைதுகிரி)

நைஜீரியாவில் மைதுகிரி நகரின் வட கிழக்கே நடைபெற்ற குண்டு வெடிப்புகளில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 117 ஆக உயர்ந்துள்ளது.

இந்த தாக்குதல்களுக்கு எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், இதற்கு போகோ ஹராம் தீவிரவாதிகளே காரணம் என்று கூறப்படுகிறது. கொமாரி மற்றும் அஜிலாரி மாகாணங்களில் ஞாயிறு இரவு இந்தக் கொடூர குண்டு வெடிப்பு சம்பவம் அரங்கேறியுள்ளது.

அதிகார பூர்வ தகவல்களை விட மூன்று மடங்கு அதிகமான மக்கள் இந்த தாக்குதலில் பலியாகியுள்ளனர். மைதுகிரி பயிற்சி வைத்திய சாலையில் 72 பேரும், போர்னோ மாநில சிறப்பு வைத்தியசாலையில் 45 பேரும் இறந்துள்ளதாக நைஜீரிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (3-7)

# பாதுகாப்பு துறையில் பிளவா? ஆப்கானில் நடப்பது என்ன?

வடக்கு ஆப்கானிஸ்தானில் நேற்று நடைபெற்ற தாக்குதல்களில் 15 வீரர்கள் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் சமீபகாலமாக பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் பொலிசாரிடையே இடம்பெறும் தாக்குதல்கள் பாதுகாப்புத்துறைக்கு கவலையை ஏற்படுத்தி வருகின்றன. படை வீரரோ அல்லது பொலிஸ்காரரோ தனது சகவீரர்களை நோக்கி திடீரென தாக்கி உயிரிழப்புகளை ஏற்ப டுத்துவதும், கிளர்ச்சியாளர்களை உள்ளே அனுமதித்து தாக்குதலுக்கு வழி ஏற்படுத்தி கொடுப்பதும் மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது.

அந்த வகையில், நேற்று வடக்கு பகுதியில் உள்ள ஜாவ்ஜான் மாகாணத்தின் குஷ் தேபா மாவட்ட சோதனைச் சாவடியில் சில கிளர்ச்சியாளர்கள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர். அவர்களுடன் இணைந்து முகமது ஆலிம் என்ற வீரரும் தாக்குதல் நடத்தினார். இதில், 10 வீரர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்தியவர்களை பொலிசார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

பார்க் மாகாணம் தவ்லத் அபாத் மாவட்டத்தில் வீதியோரத்தில் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டு வெடித்ததில் பொலிஸ் ரோந்து வாகனம் வெடித்துச் சிதறியது. இதில், மாவட்ட பொலிஸ்துறை தலைவர் உட்பட 5 பேர் பலியாகினர். 3 அதிகாரிகள் காயமடைந்தனர். இந்த தாக்குதல்களுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இதற்கிடையே, தலிபான் அமைப்பின் புதிய தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில், ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்புவதற்கு, நேட்டோ படைகள் நாட்டை ஆக்கிரமிப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார். பிற நாடுகளுடன் செய்துகொண்ட இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களை காபூல் அரசாங்கம் திரும்ப பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (3-7)

## அரசு இரகசியங்களை திருடினாராம்

# அமெரிக்கப்பெண் சீனாவில் கைது



(வோஷிங்டன்)

அமெரிக்காவை சேர்ந்த பெண், சண்டி பான் கில்லிஸ். இவர் வியட்நாமில் பிறந்தவர். ஹூஸ்டன் ஷென்ஜென் சிஸ்டர் சிட்டி சங்கத்தின் தலைவராகவும், சீன அமெரிக்க வர்த்தக ஆலோசகராகவும் செயற்பட்டு வந்தார்.

இவர் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் தலைநகர் ஹூஸ்டனின் வர்த்தக மேம்பாட்டுக்காக, கடந்த மார்ச் மாதம் எட் கான் சலெஜ் என்பவரது தலைமையிலான குழுவில் இடம்பெற்று சீனாவுக்கு சென்றிருந்தார். இந்த குழுவினர் ஹூஸ்டன் மேயர், அந்த நகரின் தொழில் அதிபர் வின்சென்ட் சாவ், சீன தொழில் அதிபர் கேரி ஜி ஆகியோரின் பிரதிநிதிகளாக சென்றிருந்தனர்.

இந்த குழு ஒருவார காலம் சீனாவில் பல்வேறு இடங்களுக்கு சென்றிருக்கிறது. பின்னர் குழு உறுப்பினர்கள் தனித்தனியே பிரிந்து சென்றிருக்கிறார்கள். ஆனால் இந்த குழுவில் சண்டி பான் கில்லிஸ் திரும்ப இணையவில்லை.

இவர் ஏற்கனவே பலமுறை சீன பயணம் மேற்கொண்டிருந்தவர் என்ற காரணத்தால், இவர் குழுவில் மீண்டும் வந்து இணையாததை குழுவுக்கு தலைமை தாங்கிய எட் சான்சலேஜ், லேசாக எடுத்துக் கொண்டார். சில தினங்களுக்கு பின்னர் அந்தக் குழுவினர், அமெரிக்கா திரும்பி விட்டனர். ஆனால் சண்டி பான் கில்லிஸ் நாடு திரும்பவில்லை.

இந்த நிலையில் அவரை சீனா பிடித்து வைத்திருப்பதாக அமெரிக்க தூதரகம் மூலமாக அவரது கணவர் ஜெப் கில்லிசுக்கு தகவல் கிடைத்தது. சீன அரசாங்க இரகசியங்களை திருடிய குற்றச்சாட்டின் பேரில் அவர் பிடித்து விசாரிக்கப்படுவதாக அவருக்கு தெரிய வந்தது.

ஆனால் சீன அரசாங்க இரகசியங்களை சண்டி பான் கில்லிஸ் திருடினார் என்ற குற்றச்சாட்டை அவரது குடும்பத்தினர் தீவிரமாக மறுக்கின்றனர். ஷஇதற்கிடையே சீன அரசின் விசாரணை வளையத்தில் இருந்த அவரை அவ்வப்போது அமெரிக்க தூதரக அதிகாரிகள் சந்தித்து நலம் விசாரித்து வந்துள்ள னர். ஆனால் அவரது குடும்பத்தின ருக்கு போதுமான தகவல்கள் எதை யும் தரவில்லை.

இந்த வழக்கு தொடர்பாக சீன் அரசிடம் இருந்து அதிகாரபூர்வமாக எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

ஏற்கனவே சீன-அமெரிக்க புவி யியல் வல் லுநர் ஒருவர் சீனா வில் உளவு பார்த்ததாக தண்டிக்கப்பட்டு விடுதலையான நிலையில், இப் போது சண்டிபான் கில்லிஸ் சீன அரசின் விசாரணை வளையத்தில் இருப்பது அமெரிக்காவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை பிடித்து வைத்து விசாரிக்கப்பட்டு வந்த சண்டி பான் கில்லிஸ், இப்போது கைது செய்யப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக அவரது கணவர் ஜெப் கில்லிஸ் தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜின் பிங், அமெரிக்க பயணம் மேற்கொள்ள உள்ள சூழ்நிலையில் இது தொடர்பாக மக்களிடம் எடுத்துச் செல்ல முடிவு செய்திருப்பதாக ஜெப் கில்லிஸ் கூறியுள்ளார்.

இதற்கிடையே சண்டி பான் கில்லிஸ் விடுதலைக்காக 'சேவ் சண்டி' என்ற பெயரில் ஒன்லைன் பிரசார இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. (3-7)

# சக்கரநாற்காலியில் நோயாளி தூக்கிலிடுவதில் குழப்பம்



(லாகூர்)

பாகிஸ்தானில் சக்கர நாற்காலியில் உள்ள நோயாளியை தூக்கில் போடுவதில் குழப்பம் காரணமாக கைதியின் மரண தண்டனை ஒத்திவைக்கப்பட்டது.

பாகிஸ்தானை சேர்ந்தவர் அப்துல் பாசித் (வயது 43). 2009 ஆம் ஆண்டு நடந்த கொலை வழக்கு ஒன்றில் இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் இவருக்கு 'டியுப்பர்குலர் மெனிங்கிட்டிஸ்' என்ற நோய் தாக்கியது. இதனால் இவர் இடுப்புக்கு கீழே முடங்கிப்போனார். நடக்க முடியாது. சக்கர நாற்காலியில்தான் வலம் வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் பைசலாபாத் சிறையில் இவரை தூக்கில போட்டு, மரண தண்டனையை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பாகிஸ்தான் சிறை விதிகள், மரண தண்டனை கைதி, தூக்கு மேடையில் நிற்க வைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் அவரை தூக்கு மேடையில் நிறுத்த முடியாது. இதனால் சக்கர நாற்காலியில் இருக்கிற ஒருவரை எப்படி தூக்கில் போடுவது என்பதில் குழப்பம் ஏற்பட்டது. இது தொடர்பாக அவரிடம் பேசிய நீதிபதி, அவரது தண்டனையை நிறைவேற்றுவதை ஒத்திவைத்தார்.

ஆனால் இது எதுவும் தெரியாமல், தூக்கில் போடப்பட்ட பின்னர் அவரது உடலை பெறுவதற்காக அவரது குடும்பத்தினர் சிறைக்கு வெளியே காத்திருந்தனர். அவரை தூக்கில் போடுவதை நீதிபதி ஒத்தி வைத்துவிட்டார் என்பதை அறிந்து குடும்பத்தினர் சற்றே நிம்மதி அடைந்தனர். பாகிஸ்தானிய சட்டப்படி, மருத்துவ ரீதியிலான காரணங்களையொட்டி தூக்கில் போடுவதை தாமதப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# இந்திய இராணுவம் போர் ஒத்திகை

## அடுத்த மாதம் ராஜஸ்தானில் ஆரம்பம்

(புதுடில்லி)

**ராஜஸ்தானில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில் இந்திய ராணுவத்தின் போபால் பகுதியைச் சேர்ந்த 21 படைப் பிரிவினர், அடுத்த மாதம் போர் ஒத்திகைப் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.**





இதுகுறித்து இராணுவ வட்டாரங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கையில்,

ஆண்டுதோறும் இதுபோன்ற போர் ஒத்திகைப் பயிற்சிகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு ராஜஸ்தானில் இந்திய இராணுவத்தின் 2 படைப்பிரிவுகள் இந்தப் பயிற்சியை மேற்கொண்டன. நிகழாண்டில் இப்பயிற்சியில் 21 படைப் பிரிவுகள் ஈடுபடவுள்ளன.

போரின்போது எமது இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த எதிரிகளுக்கு வாய்ப்பளிக்காமல், அவர்களது எல்லைப் பகுதிகளுக்குள் ஊடுருவி எப்படி தாக்குதல் நடத்துவது, எமது இராணுவ நிலைகள் மீது எதிரிப் படைகள் தாக்குதல் நடத்தினால், அவர்களுக்கு எவ்வாறு தக்க பதிலடி கொடுப்பது உள்ளிட்ட அம்சங்களை முக்கிய நோக்கமாகக் கொண்டு இப்பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளது.

போரின்போது எதிரிகளின் படைகளை நோக்கி முன்னேறும் போது ஏற்படும் பல்வேறு தடைகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் தகர்த்தெறிய, கையாள வேண்டிய உத்திகள் குறித்தும் இந்தப் போர் ஒத்திகையின்போது இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படும்.

மேலும் இதில் நவீனரக பீரங்கிகள், போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், ஆளில்லா விமானங்கள் உள்ளிட்டவற்றை திறன்பட கையாள்வது குறித்து முப்படைகளுக்கும் ஒருங்கிணைந்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (3-7)

## இந்தியாவின் சிறந்த நண்பனாக அமெரிக்கா எப்போதும் செயற்படும்

### துணை ஜனாதிபதி ஜோபிடேன்

இந்திய அமெரிக்க கூட்டு வர்த்தக பேச்சுவார்த்தையின்போது உரையாற்றிய துணை ஜனாதிபதி ஜோ பிடேன், இந்தியாவின் சிறந்த நண்பன் அமெரிக்கா என தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனில் தொடங்கியுள்ள இந்த வர்த்தக வியூகப் பேச்சுவார்த்தை உரையாடலில் ஜோன் கெர்ரி, சுஷ்மா ஸ்வராஜ், நிர்மலா சீதாராமன் உள்ளிட்டவர்களுடன் இரு நாடுகளைச் சேர்ந்த 400 தொழிலதிபர்களும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டு பேசிய அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடேன், இந்திய-அமெரிக்க கூட்டுறவு 21ம் நூற்றாண்டினை முடிவு செய்யும என தெரிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க நிர்வாகம் இந்தியாவின் சிறந்த நண்பனாக செயற்பட விரும்புவதாகவும்,

இருதரப்பு வர்த்தகம் மற்றும் கூட்டுறவின் ஆற்றலையும் பயன்படுத்தி மேலும் பல சீர்திருத்தங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய-அமெரிக்க வர்த்தக கவுன்சிலின் 40-வது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்த உரையாடல் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## அமெரிக்காவிலிருந்து ஹெலிகொப்டர்கள்

அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங்கிடமிருந்து 2.5பில்லியன் டொலர் மதிப்பிலான 37 இராணுவ ஹெலிகொப்டர்களை வாங்குவதற்கு இந்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு விரைவில் விஜயம் செய்யவிருக்கும் நிலையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் 22 அப்பாச்சே தாக்குதல் விமானங்களையும்15 சீனூக் ஹெலிகொப்டர்களையும் இந்தியா வாங்கவிருக்கிறது. (3-7)

## பாரதச் செய்தி

## தாக்குதல் சூத்திரதாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அமெரிக்காவும் இந்தியாவும் பாகிஸ்தானை வலியுறுத்து

(வோஷிங்டன்)

மும்பையில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள், என்று பாகிஸ்தானை இந்தியா மற்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளன. மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் 10 பேர் கடல் மார்க்கமாக புகுந்து, 10க்கும் மேற்பட்ட இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர். 166 பேர் கொன்று குவிக்கப்பட்ட இந்த தாக்குதல், இந்தியாவை பதற்றத்தில் ஆழ்த்தியது. இந்த தாக்குதல்களை நடத்திய 10 தீவிரவாதிகளில் 9 பேர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற இளம் தீவிரவாதி மட்டும் கைது செய்யப்பட்டு, சட்டப்படி விசாரணை நடத்தி மரண தண்டனை விதிக்கப்பட்டு, தூக்கில் போடப்பட்டார்.

இந்த தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட தீவிரவாதி லக்வி உள்ளிட்டவர்கள் மீது பாகிஸ்தானில் வழக்கு விசாரணை 7 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தான் உளவு அமைப்பான எப்.பி.ஐ.யின் முன்னாள் தலைவர் தாரிக் கோசா, 166 பேர் கொன்று குவிக்கப்பட்ட மும்பை தாக்குதலுக்கு பாகிஸ்தானில்தான் சதித்திட்டம் தீட்டப்பட்டது என பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

166 பேரை கொன்று குவித்த மும்பை தாக்குதலில் மூளையாக செயறபட்டவர்களில் ஒருவர், ஹபீஸ் சயீத். இவர் ஜமாத் உத் தாவா என்ற தீவிரவாத இயக்கத்தை நடத்தி வருகிறார். இந்த இயக்கம் தீவிரவாத இயக்கம் என ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது தலைக்கு அமெரிக்கா 10 மில்லியன் டொலர் (ரூ.65 கோடி) விலை பேசியுள்ளது. ஆனால் அவர் பாகிஸ்தானில் சர்வசாதாரணமாக நடமாடி வருகிறார். இந்த நிலையில் பாகிஸ்தான் அரசு, தீவிரவாத இயக்கங்களை பட்டியலிட்டு உள்ளது. 60 இயக்கங்களை கொண்ட பட்டியலில் இந்த ஜமாத் உத் தாவா இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மும்பையில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்கள் மற்றும் உதவியவர்கள் அனைவரும் பாகிஸ்தானில் சுதந்திரமாக சுற்றி வருகின்றனர். பாகிஸ்தானுக்கு, இந்தியா பல்வேறு ஆதாரங்களை வழங்கியுள்ள நிலையில் அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க மறுத்து வருகிறது.

இந்நிலையில் மும்பையில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று பாகிஸ்தானை இந்தியா மற்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. (3-7)

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் ஒடிசாவில் கழுத்தறுத்து கொலை

(புவனேஸ்வர்)

ஒடிசா மாநிலத்தில் உள்ள பூரி மாவட்டத்தில் ஓய்வு பெற்ற பள்ளி ஆய்வாளர், அவரது மனைவி மற்றும் அவர்களின் இரு பெண் குழந்தைகள் ஆகியோர் கழுத்தறுத்து மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பூரி மாவட்டத்தில் உள்ள அரசு பாடசாலைகளை ஆய்வு செய்யும் கல்வித்துறை அதிகாரியாக பணியாற்றி, ஓய்வுபெற்ற தீனபந்து மாலிக்(65) என்பவர், பூரி மாவட்டத்தில் உள்ள நகாரா கிராமத்தில் தனது மனைவி நிர்மலா மற்றும் மகள்களான சாஸ்வதி(13),பிரனதி(7) ஆகியோருடன் வசித்து வந்தார்.

நேற்று முழுவதும் அவர்களின் வீடு உட்புறமாக தாழிட்டபடி இருந்தது. மாலைவரை வீட்டில் இருந்து யாரும் வெளியே வராததால் சந்தேகப்பட்ட அக்கம் பக்கத்து வீட்டினர், தீனபந்துவின் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து, திறந்துகொண்டு உள்ளே சென்று பார்த்தனர். படுக்கை அறையில் அந்த கோரக் காட்சியை கண்ட அனைவரும் பீதியில் உறைந்து போய் நின்றனர்.

தீனபந்து மாலிக், நிர்மலா, சாஸ்வதி, பிரனதி ஆகிய நால்வரும் கழுத்து அறுபட்ட நிலையில் இரதத வெள்ளத்தில் பிணமாக கிடந்தனர். அறையின் சுவர்களில் இரத்தம் தெளித்து கிடந்தது. இது தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிசார், நான்கு சடலங்களையும் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த படுகொலையில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிசார், கொலையின் பின்னணி என்ன? கொலையாளிகள் யார்? என்பது தொடர்பாக வழ்க்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். (3-7)

## உள்ளூராட்சி சபைகளுக்கான தொகுதிவாரி தேர்தல்; ஜனாதிபதியின் தீர்மானத்தை மதிக்க தினேஷ் வலியுறுத்தல்


எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்தவுள்ளது குறித்த ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு மதிப்பளிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பௌத்த மத்திய நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே மஹஜன எக்சத் பெரமுண தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன மேற கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அண்மையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தது.

எனினும் தொகுதிவாரி அடிப்படையிலேயே இனி அனைத்துத் தேர்தல்களும் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வலியுறுத்தியிருந்தார்.

இதனை சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, தேர்தல் முறையை மறுசீரமைப்பது தொடர்பாக தனது தலைமையிலான குழு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதனை ஆதரித்ததாக தெரிவித்தார்.

அத்துடன் அனைத்து அரசியல் வாதிகளும் ஏற்றுக்கொண்ட அந்த அறிக்கையின் பிரகாரம் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்த ஐக்கிய தேசியக் கட்சி இணங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)




# கடந்த காலத் தவறுகளை மீண்டும் செய்ய தயாரில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**கடந்த கால தவறுகளை மீண்டும் செய்ய நாம் தயாரில்லை. அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டறிய எண்ணியுள்ளோம். இன, மத பேதங்களை தூண்டி பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தெளிவுபடுத்தலின் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் பிரச்சினையை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்ல தயாரில்லை. பாராளுமன்ற அனுமதியுடன் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை பெறுவதே அரசின் நோக்கமாகும்.

அனைத்து மக்களும் எவ்வித தடையுமின்றி வாழக்கூடிய நாட்டை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமை.

நாட்டில் வாழும் எந்தவொரு இனத்தவருக்கும் எவ்விதமான அநீதியும் ஏற்படுத்தாத சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு ஆதரவான மூன் மொழிவை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது அமெரிக்காவின் முன் மொழிவு என்ன என்பது தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் என நம்புகிறேன்.

அவசியமான ஏனைய அறிக்கைகளை கவனித்தில் கொண்டு சபாநாயகரிடம் கலந்துரையாடி, இவ்விடயம் தொடர்பில் விவாதிக்க முடியும் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கேள்விகளால் திணறடித்த அநுரகுமார திஸாநாயக்க

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் கேள்விகளால் ஆளுங்கட்சி கடுமையாகத் திணறியது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் அவர் பத்துக் கேள்விகளை ஆளுங்கட்சி அமைச்சர்களிடம் முன்வைத்தார்.

எனினும் அவரது கேள்விகளில் பெரும்பான்மையான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படவில்லை. இது குறித்து அநுரகுமார கடுமையாக விமர்சித்தார்.

ஆளுங்கட்சியினர் தனது கேள்விகளைத் தவிர்த்துச் செல்ல முயற்சிப்பதாகவும், மோசடிக்காரர்களுக்குத் தண்டனை அளிப்பது குறித்த அரசாங்கத்தின் வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஆளுங்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல, அநுரகுமாரவின் கேள்விகளை அரசாங்கம் உதாசீனப்படுத்தவில்லை என்றும், எதிர்வரும் நாட்களில் அது தொடர்பாக விரிவான பதில்களை அளிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (இ-7)

## மாயமான நால்வரும் மீட்பு

ஹண்டி, ரங்கல- நக்கீல்ஸ் மலைத்தொடரிலுள்ள, கோணவெல நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்காக சென்று மாயமான நால்வரும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போனதாகக் கூறப்படும் நால்வரையும் மீட்பதற்காக, இரண்டு பொலிஸ குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ரங்கல வன்வாரி பிரதேசத்தைச் சேர்ந்த 36, 34 வயதுடைய நபர்களும் 18, 24 வயதுடைய இளைஞர்களும் கோணவெல நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்று காணாமல் போயிருந்தனர்.

இவர்களில் ஒருவர் தனது மனைவிக்கு கடந்த திங்கட்கிழமை இரவு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி தாம், காட்டுக்குள் வழி தவறிவிட்டதாக தெரிவித்துள்ளார்.

கணவனின் தொலைபேசிக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்திய போதும் அது செயலிழந்திருந்தது.

இதன் பின்னர் இவ்விடயம் தொடர்பில் மேற்படி நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடும் செய்யப் பட்டிருந்தது.

இதனையடுத்து பொலிஸாரினால் நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களினால் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். (இ-7)

## காலிக் கடற்கரையோரத்தில் கண்ணிவெடி கண்டுபிடிப்பு

காலி கடற்கரையோரப் பகுதியில் நேற்று காலை கண்ணிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தேசிய கடல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டின் பேரில் நேற்று காலிக் கடற் கரையோரப் பிரதேசத்தை சுத்திகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட காலிக் கடற்கரையோரமாக மண்ணுக்குள் புதைந்த நிலையில் இந்த கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடற்படையினர் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

## அவன்கார்ட் விசாரணையை உடனடியாக செயற்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

சட்டமா அதிபரினால் குற்றம் இல்லை எனக்கூறி நீதி விவ காரங்கள் நிறைவு செய்யப்பட்ட அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உடனடியாக செயற்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் எந்த விளக்கத்தை வழங்கினாலும் அவ்விசாரணைகளை முன்னோக்கிகொண்டு செல்லுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மற்றும் அவன்கார்ட் தலைவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் வழக்கு நடவடிக்கைகளை முன்னோக்கி கொண்டு செல்லப் போவதில்லை என சட்டமா அதிபர் நீதிமன்றில் அண்மையில் அறிவித்திருந்தார்.

கடந்த அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்களுக்கு எதிராக விசாரணைகளுக்கு சட்டமா அதிபரினால தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு அவர விசாரணை அறிக்கைகளை எதிரான மூடி மறைக்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-7)

## சிறுமி மீது வன்புணர்வு 3 பேர் விளக்கமறியலில்

பொலன்னறுவை- மன்னம் பிட்டிய பகுதியில் 9 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 57,64 மற்றும் 74 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மற்றுமொரு சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு முதல இந்த வருடம் ஓகஸ்ட் மாதம வரை சிறுமி தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிறுமி பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (இ-7)

# மகிந்த அரசின் கொள்கைகளை முன்னெடுக்கும் தேசிய அரசாங்கம்

## வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

ஊழல், மோசடிகள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ அரசின் கொள்கைகளை அப்படியே தேசிய அரசாங்கமும் முன்னெடுத்து வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஊழலுக்கு எதிரான மக்கள் குரல் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த சமரசிங்க, நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட வசந்த சமரசிங்க,

முன்னாள் அரசாங்கத்தின் ஊழல் அமைச்சர்கள் மீதான விசாரணைகள் அனைத்தும் தற்போது இந்த அரசாங்கத்தினால் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் மெகா டீல் கலாசாரமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் பிரதிபலனாகவே குற்றவாளிகள் மீண்டும் அமைச்சுப் பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல், முறைகேடுகள் தொடர்பில் ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிலும் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் இதுகுறித்த விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கத்தின் உத்தரவு வரும்வரை அதிகாரிகள் காத்திருப்பதாகவும் வசந்த சமரசிங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் குறித்து அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறினால், அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் சேகரிக்கப்பட்டுள்ள சாட்சியங்களுடன் பொது மக்கள் மன்றத்திற்கு அவற்றை எடுத்துச் செல்லப் போவதாகவும் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார். (இ-7)

# கலப்பு நீதிமன்றிற்கெதிராக நாடு முழுவதும் போராட்டம்

## தேசிய சுதந்திர முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கலப்பு நீதிமன்ற யோசனைக்கு எதிராக விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி நாடு முழுவதிலும் போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.**

கலப்பு நீதிமன்றின் பாதக விளைவுகள் குறித்து கருத்தரங்குகளை நடத்தி அதன் ஊடாக மக்கள் தெளிவுபடுத்தப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு மக்கள் கலை கேந்திர நிலையத்தில் விசேட கருத்தரங்கு ஒன்று நடைபெற வுள்ளது.

கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச இந்த கருத்தரங்கிற்கு தலைமை தாங்கவுள்ளார்.

"வெள்ளைக்காரனின் நீதிமன்றில் தேசத்தின் பொய் வழக்கு" என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களினதும் முக்கிய நகரங்களை உள்ளடக்கி இந்த கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி கட்சி ஊடகங்களுக்கு அறிவித்துள்ளது. (இ-7)

# ஏமாற்றுப் பேர்வழி உதயகம்மன்பில இனவாதத்தைத் தூண்ட சதிமுயற்சி!

## அமைச்சர் ஹரிசன் கடும் விமர்சனம்

(கொழும்பு)

ஏமாற்றுப் பேர்வழியான உதய கம்மன்பில. தற்போது இனவாதத்தைத் தூண்டும் சதி முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் பீ. ஹரிசன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அநுராதபுரம் . மகவிலச்சிய பகுதியில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பொன்றின் போது உரை நிகழ்த்துகையில் கிராமியப் பொருளாதார அமைச்சர் பீ. ஹரிசன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஹரிசன்.

புலிகள் மீண்டும் எழுச்சிபெறப் போவதாக ஒப்பாரி வைத்து மகிந்தவை இழுத்துவந்தே உதயகம்மன்பில நாடாளுமன்றத்துக்குள் நுழையும் வாய்ப்பை பெற்றுக் கொண்டார்.

அவர் ஒரு கட்சியை வைத்துக் கொண்டுள்ளார். அதன் தலைவரும் அவர்தான். செயலாளரும் அவர்தான். தற்போது ஊடகச் செயலாளரும் அவர்தான். அரசியலிலும் அவர் இதுபோன்ற ஏமாற்றுத்தனமான குணத்தைத்தான் கொண்டுள்ளார்.

உதய கம்மன்பில போன்றவர்களுக்கு சிறந்த உதாரணம்தான் தங்கையைக் காட்டி அக்காவைத் திருமணம் செய்து கொடுக்கும் ஏமாற்று நடவடிக்கையாகும். அவ்வாறான ஏமாற்றுப் பேர்வழி அவர். புலிகளை மீள எழுச்சி பெற வைக்க



முயன்று தோற்றுப்போன அவர் இப்போது இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

அவருடன் எதிர்க்கட்சியில் ஒரு சிலரும் கைகோர்த்துக் கொண்டுள்ளார்கள் என்றும் அமைச்சர் ஹரிசன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறுமி கொலை குறித்து உயர்நீதிமன்றில் வழக்கு

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கொட்டதெனிய சிறுமி கொலை வழக்கு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சிறுமியின் கொலை மற்றும் அது தொடர்பான விசாரணைகள் குறித்து எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் வாய்மொழி வினாவொன்றைத் தொடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, சிறுமியின் கொலை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் அநுரகுமார திஸாநாயக்கவின் கேள்விக்குப் பதிலளிக்க மறுப்புத் தெரிவித்துள்ள பொலிஸ் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திலக் மாரப்பன, தற்போது இது தொடர்பாக நீதிமன்ற விசாரணை நடைபெறுவதால் மேலதிக விபரங்களை வெளியிட முடியாது என்று தெரிவித்துள்ளார்.

எனினும் சிறுமியின் கொலை தொடர்பாக சுமார் 500 பேர் வரை விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள திலக் மாரப்பன, விசாரணைகளை சீக்கிரமாக நிறைவு செய்து வழக்குத் தொடர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுப்பதற்கான சிபார்சுகளை முன்வைப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்கவுள்ளதாவும் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். (இ-7)

# மரண தண்டனைக் கைதிகள் கலக்கம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மரண தண்டனைக் கைதிகள் தூக்குத்தண்டனை குறித்த அச்சம் காரணமாக கடும் கலக்கத்திற்குள்ளாகியிருப்பதாக தெரிய வந்துள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் பெருகி வரும் குற்றச்செயல்களின் காரணமாக பாரிய குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்ற குரல்கள் நாட்டில் வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே மரண தண்டனை அளிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் இதன் காரணமாக கடும் கலக்கம் அடைந்துள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனைக் கைதிகள் இதன் காரணமாக திடீர் சுகயீனம், வயிற்றுப்போக்கு, மயக்கம் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் தூக்குமேடை கடந்த சில நாட்களாக தயார்படுத்தப்பட்டு வருவதும் மரண தண்டனைக் கைதிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள திடீர் கலக்கத்திற்கான காரணமாக அமைந்திருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உயிருக்கும் உணவு தருவோம்

உடம்புக்கு உணவுபோலவே உயிருக்கும் உணவு தேவை என்று நாம் எப்போதாவது யோசித்தது உண்டா?

உயிருக்கு எது உணவு? நல்ல சிந்தனைகள். நல்ல எண்ணங்கள்...இவை தாம் உயிருக்கு உணவு. இவை மீண்டும் மீண்டும் எண்ணப்படும் போது நோய்வாய்ப்பட்ட மனம் சீரடையும். வாழ்வில் உயர்ந்த மகான்கள்,ஞானிகள் அறவுரைகளை அடிக்கடி கேட்கிற போது, நமது குழப்பம் நீங்கி, தெளிவு பெற்று வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கின்ற மனோதிடம்,நம்முன் உருவாகின்றது.

பெரியவர்களையும் உறவினர்களையும் கொல்லுவதா என்று குழம்பித் தளர்ந்த அர்ச்சுனனுக்குத் திரும்பத் திரும்ப கண்ணன் சொன்ன தெளிவுரைகள் ,அவனைச் செயலில் செலுத்தின. அந்தக் கீதை அர்ச்சுனனுக்காக மட்டும் ஓதப்படவில்லை. அர்ச்சுனனைக் காரணமாக்கிக் கொண்டு மனித குலம் முழுமைக்கும் அது வழங்கப்பட்டது.

உலகில் பலபேர் நிகழ்காலத்தில் வாழ்வதேயில்லை. கடந்த காலம் பற்றிய கழிவிரக்கத்திலும் எதிர் காலம் பற்றிய ஏக்கங்களிலும் தங்கள் காலத்தை விரயமாக்குகின்றனர். கிடைத்திருக்கும் பொன்னான நிகழ்காலத்தில் வாழ்ந்து பழக வேண்டாமா? கவலைகளையும் துயரங்களையும் தூக்கி எறிந்து, வாழ்வின் பிரச்சினைகளை எதிர் கொண்டு வாழப் பழகும் வாழ்க்கைக் கலையே யோகமாக வர்ணிக்கப்படுகிறது.

மனத்தின் சம நிலையே வாழ்க்கைக் கலையின் முக்கிய அம்சம். இன்பத்திற்கு இன்பப்படாமல், துன்பத்திற்குத் துன்பப்படாமல், மனத்தின் சமநிலை பாதிக்கப்படாத சாந்தம், வாழ்வின் எல்லாச்செயல்களின் மையமாகவும் அமைவது அவசியம்.சுகமும் துக்கமும், இலாபமும் நஷ்டமும், வெற்றியும் தோல்வியும் சமம் என்று நினைத்துப் போருக்காகவே போர் செய். அப்போது பாவம் வந்து உன்னை அடையாது என்கிறார் கண்ணன், கீதையில்.

இது போருக்கு மட்டுமே பொருந்தும் என்பதில்லை. வாழ்க்கைப் போராட்த்தின் எல்லா நிலைகளுக்குமே பொருந்தும். தசரதரால் ராஜ்யம் தரப்பட்டபோது இராமன் ஆனந்தக் கூத்தாடவில்லை. கைகேயியால் அது பறிக்கப்பட்டபோதும் அவர் கண்ணீர் உகுக்கவில்லை.சமநிலை மாறாத ஞானியாக சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையாக விளங்கியதைக் கம்பன் விளக்கி இருக்கிறார்.

தசரதரால் ஆட்சி தரப்பட்டபோதும்,கைகேயியால் பறிமுதல் செய்யப்பட்டபோதும் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்ற கடமை உணர்வு மட்டுமே அந்தப் புருஷோத்தமனுக்கு இருந்தது.இதுபோல் இராவணனைப் போர்க்களத்தில் வீழ்த்தும் போதும், புகழ் வேட்கையோ இலங்கையை ஆளும் வெறியோ இராமனுக்கு இல்லை.மனைவியை மீட்பது என்ற தனி மனித கடமையும்,அநீதியை அழிப்பது என்ற சமுதாயக் கடமையும் மட்டுமே அவரைச் செயலில் தூண்டியது. எனவே சமநிலை என்ற சாந்த உணர்வு வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவசியமானது.

''பலாப்பழத்தை அறுக்கிறவர்கள் அதன் பசையில் இருந்து தப்புவதற்கு ஒரு உபாயம் செய்வது உண்டு கையில் எண்ணெயைத் தடவிக் கொண்டு, பலாப்பழத்தைப் பிய்த்துச் சுளை எடுப்பது போல,ஈஸ்வர சிந்தனையை மனதில் வைத்துக் கொண்டு உலக விவகாரங்களில் ஈடுபட்டாலும் சிக்கல் வராது'' என்கிறார் பகவான் இராமகிருஷ்ணர்.

மனம் சம நிலை அடைந்த பிறகு, உள்ளத்தில் பிறக்கும் தெய்வீகத் தூண்டுதலால் நாம் செயற்படுகின்றோம். எனவே அந்தச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியது தெய்வமே. இந்த நிலை கைவரப் பெற்றவர்கள் சுகம், துக்கம்,விருப்பு, வெறுப்பு,ஏன் நன்மை தீமை என்ற நிலைகளையெல்லாம் கடந்து விடுகிறார்கள்.

**''நன்றே செய்வாய்; பிழை செய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே''**
என்கிற திருவாசகமும்-
**''நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்**
**அறிவது ஒன்றேயும் இல்லை''**
என்ற அபிராமி அந்தாதியும் -
**நன்மை தீமைகள் ஒன்றும்,அறியேன்**
**நமோ நாராயணா''**
என்னும் ஆழ்வார் அமுத வாக்கும், இந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளே.

எனவே தான்,நன்மை விளையுமா தீமை விளையுமா என்கிற முடிவுகளை இறைவனிடம் விட்டு விட்டு,நாம் கடமையை மட்டுமே செவ்வனே ஆற்றப் பழக வேண்டும் என்பது. அப்போது துக்கம் ஒருபோதும் நம்மை அணுகுவதில்லை.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2015~17.10.2015

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## முன்னேற்றப் பாதையை நோக்கி முன்னேறுவீர்கள்!



**முன்னேற்றப் பாதையை நோக்கி முன்னேறுவீர்கள்! புகழ்ச்சிக்கு மயங்கக்கூடாது என்று சொல்லும் கும்ப இராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் சனி பத்தாமிடத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசியைக் குரு, செவ்வாய், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் பார்க்கிறார்கள். பொதுவாக குருமங்கள யோகத்தோடும் மாதம் பிறப்பதால் அருளாளர்களின் ஒத்துழைப்போடும், அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்போடும் வாழ்க்கை பாதையில் வசதிகளை பெருக்கிக் கொள்ளப் போகிறீர்கள். கல்யாண வாய்ப்புகளும் கைகூடலாம், கட்டிடப் பணியும் தொடரலாம். வெளிவட்டாரப் பழக்கம் விரிவடையும்.

அதே நேரத்தில் அஷ்டமத்தில் சூரியனோடு ராகு இணைந்து சஞ்சரிக்கிறார் அல்லவா! எனவே குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலைத் தொல்லைகள் உருவாகலாம். பெற்றோர்களின் உடல் நலம் சீராக பெரும் தொகை ஒன்றைச் செலவழிக்கும் சூழ்நிலை ஏற்படும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்கள் பின்னடைவு ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள்.

உடனருப்பவர்களிடம் ரகசியங்களை சொல்வதன் மூலம் உயர்பதவியிலிருந்து ஒருசிலர் மாற்றப்படலாம். எனவே சர்ப்ப சாந்தி பரிகாரங்களையும், சூரிய ராகு சேர்க்கைக்குரிய முறையான பரிகாரங்களையும் செய்தால் காரியத் தடைகள் அகலும். காசு, பணப்புழக்கம் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் பார்க்கும் குருவைப் பலப் படுத்த வேண்டியது அவசியமாகும்.

மாதத் தொடக்கத்தில் புதன் வக்ர இயக்கத்தில் இருப்பது நன்மைதான். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் வக்ரம் பெறும்பொழுது மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். உறவினர்களின் இல்லத் திருமணங்களுக்கு பணம் கொடுத்து உதவி செய்வீர்கள். சுய ஜாதகத்தில் சனியின் நிலை அறிந்து அதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலம் சனியின் அருளுக்கு பாத்திரமாக இயலும்.

'மந்தன் செய்வதைப் போல மகேசன் கூட செய்யமாட்டான்' என்பார்கள். அப்படிப்பட்ட மந்தன் எனப்படும் சனிபகவான் தற்சமயம் தொழில் ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கிறார். எனவே, சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும் என்றே கருதலாம்.

**புதன் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். பஞ்சமாதிபதி வக்ர நிவர்த்தியாவதால் பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாகும்.

விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், அவர்கள் தொழில் முயற்சி கருதியும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை அமையும்.

கூட்டாளிகளால் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் கைகூடிவரும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்பார்கள்.

அந்த அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களுக்கும் வேலை கிடைக்கும். அவர்கள் மூலமாக உதிரி வருமானங்கள் வந்து சேரும்.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 28 ஆம் திகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 4, 9 இற்கு அதிபதி 7 இல் சஞ்சரிப்பது யோகம் தான். இதன் விளைவாக பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

பெற்றோர்களின் பிரியம் கூடும். உங்களுக்குச் சேர வேண்டிய தொகையை மனம் கோணாமல் கொண்டுவந்து கொடுப்பர். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும். தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்ய முன்வருவீர்கள்.

தாய்வழி உறவினர்களின் ஒத்துழைப்பு தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும்.

இம்மாதம் விநாயகப் பெருமான் வழிபாட்டை வெள்ளிக்கிழமை தோறும் செய்து வருவது நல்லது. சனிக்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்ல பலன்களைத் தரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். இரண்டில் கேது இருப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். வாரிசுகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள். தாய் வழித்தனலாபம் உண்டு.

மாதத்தின் மையப் பகுதியில் சுக்ரன் பலம் பெறும் நேரத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறலாம். ஒருசிலர் இட மாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றை சந்திக்க நேரிடலாம். இனிய பலன்கள் வந்து சேர சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

## சூரியபகவான் வழிபாடு சுகத்தை வழங்கும்!



**சூரிய வழிபாடு சுகத்தை வழங்கும்! கனிவோடு பேசி காண்பவர்கள் மனதில் இடம்பிடிக்கும் மீன இராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசியில் கேதுவும், ஏழில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள் அதுமட்டுமல்லாமல் சப்தம ஸ்தானத்தில் சூரியன் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். எனவே கோபமும், கொந்தளிப்பும் உங்களுக்கு அடிக்கடி வரலாம். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலம் காரியத்தடைகளை அகற்றிக் கொள்ள இயலும். பார்க்கும் சூரியனுக்குப் பரிகாரமாக சூரியனார் கோவில் சென்று வழிபாட்டை மேற்கொள்ளலாம். சூரியனுக்குரிய பாடல்களை அன்றாடம் பாடி சூரிய நமஸ்காரம் செய்யலாம்.

பஞ்சம ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அஷ்டமாதிபதி 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் தொல்லைகள் உருவாகி மறையும். வேலை வாய்ப்பை முன்னிட்டோ, படிப்பை முன்னிட்டோ வெளியிடங்களில் இருக்கும் பெண் குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. ஆறாமிடத்தில் புதன் மற்றும் செவ்வாய் குருவோடு இணைந்திருப்பதால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

உத்தியோகத்தில் ஒருசிலருக்கு ஊர் மாற்றங்கள் வந்து சேரலாம். வரும் மாற்றத்தை உபயோகப் படுத்திக் கொள்வதுதான் நல்லது. இதுவரை உங்கள் ராசிப்படி அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றது. டிசம்பர் 14 ஆம் திகதி விலகிய சனி மீண்டும் அஷ்டமத்திற்கு வக்ர கதியில் வந்துவிட்டது. எனவே, அஷ்டமத்திற்கு வக்ரமாக வந்த சனி பகவான் இப்பொழுது பூரணமாக விலகிவிட்டார். இனி உங்கள் எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். புனித பயணங்களையும் மேற்கொள்வீர்கள்.

ஆறில் குரு, செவ்வாய் இணைவதால் குருமங்கள யோகம் உருவாகிறது. எனவே சகோதர வழியில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுபகாரிய நிகழ்வுகள் இப்பொழுது நடைபெறப் போகின்றன. அதுமட்டும் அல்லாமல் உடன் பிறப்புகளின் குடும்ப முன்னேற்றம் கருதி உதவிக்கரம் நீட்டுவீர்கள். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்பதால் பொருளாதாரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு அக்டோபர் 4 ஆம் திகதி உச்சம் பெறுகிறார். 4, 7இற்கு அதிபதி வக்ர நிவர்த்தியாவதால் தாயின் உடல் நலம் சீராகும். இடம், பூமி வாங்கியதில் இருந்த தகராறுகள் அகலும். கடன் சுமை பாதிக்கு மேல் குறைந்ததென்று சொல்லி மகிழ்வீர்கள்.

பூர்வீக இடத்தை விற்றுவிட்டு புதிய இடத்தில் வீடு கட்டலாமா? என்று யோசிப்பீர்கள். வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினைகள் தீரும்.

அவர்களின் வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பித்திருந்தவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும்.

புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை நடத்திக் கொடுப்பர். அன்னிய தேசத்திலிருந்து வரும் அலைபேசிவழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

சிம்ம ராசியில் செப்டம்பர் 28 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 8இற்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது முகம் தெரியாத நபர்கள்கூட உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். விபரீத ராஜயோகம் அடிப்படையில் உங்கள் செயற்பாடுகள் எப்படியிருந்தாலும் வெற்றிச் செய்திகள் வீடு நோக்கி வந்த வண்ணம் இருக்கும்.




வருமானம் திருப்தி தரும். விலகிச் சென்ற உறவினர் கள் விரும்பிவந்து சேருவர். கடிதம் கனிந்த தகவலைக் கொண்டு வந்து மகிழ்விக்கும்.

பயணங்களால் பலன் உண்டு. உத்தியோ கஸ்தர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு சுயதொழில் தொடங்க வாய்ப்பு வரும் நேரமிது. இம்மாதம் தென்முகக் கடவுளை இன் முகத்தோடு வழிபாடு செய்யுங்கள். ஆதியந்தப் பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வீடு மாற்றங்களும், விருப்ப ஓய்வில் வந்து சுயதொழில் தொடங்கும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு உருவாகும். கணவன்-மனைவிக்குள் சண்டை, சச்சரவுகள் ஏற்படாமல் இருக்க வராஹி அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். உங்களின் பழைய ஆபரணங்களைக் கொடுத்துவிட்டு புதிய ஆபரணங்களை வாங்குவீர்கள்.

வீடுமாற்றச் சிந்தனைகள் மாதக் கடைசியில் மேலோங்கும். மேற் படிப்பிற்காக எடுத்த முயற்சியும், அனுகூலம் உண்டு. அனுமன் வழிபாடும், ஸ்ரீராமஜெயம் எழுது வதன் மூலமும் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம். (முற்றும்)

# தேசியப் பட்டியலுக்கு எதிரான வழக்கின் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்தல் பிறப்பித்துள்ளது.**

இதற்கமைய தேர்தல்கள் ஆணையாளர், ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பின முன்னாள் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் அறிவித்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்ளுக்கும் நீதிமன்றம் அறிவித்தல் பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலுக்கு எதிராக மஹஜன எக்சத் பெரமுணவின் உப தலைவரான டி.டி.சோமவீர சந்திரசிறி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை நீக்கி தம்மை பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம். டி.நவாஸ் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபட்டது. மேலதிக விசாரணை டிசெம்பர் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது

இதேவேளை, தேசியப் பட்டியலுக்கு எதிராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியூ.குணசேகர தாக்கல் செய்திருந்த மனு உயர்நீதி மன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனெக்க அளுவிஹாரே மற்றும் உப்பாலி அபேரத்ன ஆகியோர் அங்கம் வகித்த மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவை மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் வசாரிக்க முடியும் என இதன் போது பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இந்த விடயம் மனுதாரருக்கு மாத்திரம் பொதுவான ஒன்றல்ல என டியூ குணசேகர சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்துள்ளனர்.


அரசியல் அமைப்பு மற்றும் மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம் என்பதால் இந்த மனுவை ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் இந்த கோரிக்கை தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாட வேண்டியுள்ளதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது. மேலதிக விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100-130 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 160 | 160 | 120 |
| தக்காளி | 80 | 80 | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 | 60 |
| கோவா | 60 | 50 | 70 | 80 | 70 |
| கரட் | 100 | 50 | 100 | 120 | 60 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 30 | 50 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | –70 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 100 | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 90 | 100 | 100 |
| பயற்றங்காய் | 40 | 60 | 70 | 60 | 40 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 | 70 |
| பீற்றூட் | 40 | 20 | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | - | 60 | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 150 | 160 | 150 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-70 | 40 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 100 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | — | 200 | 100 |
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 25 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (498)


அஜந்தன் அஜா




சபஸ்ரியன் மெல்போன்



வபா சி.எம்.பாங்




வசந் அழகேந்திரம்




வேல்ஆனந்தன் ஆனந்தன்



டினிசன் டினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சீனா தனது தவறை உணருமா?

இலங்கையில் சீனப் பயணிகளால் முகங்கொடுக்கப்படும் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு சீனா அண்மையில் அறிக்கையை வெளியிட்டதா? அல்லது இலங்கைத் தீவின் அரசியற் சூழலை மதிப்பீடு செய்வதற்காக இது வெளியிடப்பட்டதா? என்பது குறித்து ஆராயப்பட வேண்டும்.

**இவ்வாறு, சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழ்தியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**



இலங்கையை மகிந்த ராஜபக்ஷ ஆட்சிசெய்த காலத்தில் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள் போன்றன தமது நாடுகளிலிருந்து பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கைக்குப் பயண எச்சரிக்கைகளை விடுத்திருந்தன.

இது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. இந்த பயண எச்சரிக்கைகள் தனது நாட்டின் பொருளாதாரம் மீதான மறைமுக அச்சுறுத்தல் என்பதை மகிந்த ராஜபக்ஷ நிர்வாகம் நன்குணர்ந்தது.

இருப்பினும், சஇலங்கைக்கான பயண எச்சரிக்கைகளை நீக்குவதற்கான முயற்சிகளை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்தது.

ஏனெனில் இந்தப் பிரச்சினையை அப்போதைய எதிர்க்கட்சி முதன்மைப்படுத்தியது. இலங்கைய யாத்திரிகர்கள் இந்தியாவுக்குப் பயணம் செய்த போது அவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.

இதனால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் இந்தியாவுக்குப் பயணம் செய்யும் யாத்திரிகள் மீது பயண எச்சரிக்கைகளை அமுல்படுத்தியது.

மகிந்த ராஜபக்ஷவின் இந்த நகர்வை இந்தியா வரவேற்கவில்லை. இதனால் இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் யாத்திரிகர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்குவதற்கு இந்தியா தயாராக இருந்தது.

இவ்வாறான பயண எச்சரிக்கைகளும் ஆலோசனைகள் மற்றும் தடைகளும் பொதுவான ஒரு பிரச்சினையாக மாறியது.

ஒகஸ்ட் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கு இரு நாட்களுக்கு முன்னரும்கூட சீனா தனது நாட்டிலிருந்து இலங்கை செல்லும் சுற்றுலாப் பயணிகளும் பயண எச்சரிக்கையை வழங்கியிருந்தது.

'இலங்கைக்குப் பயணம் செய்யும் சீனப் பயணிகள் இலங்கைத் தீவில் இடம்பெறும் பல்வேறு விபத்துக்கள் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

அண்மைய ஆண்டுகளில், இலங்கைக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஆனால் இலங்கை செல்லும் சீனச் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு அசௌகரியங்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு ஆளாகுகின்றனர்.

இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களில் இலங்கைக்குப் பயணித்த சீனர்களில் 46 சுற்றுலாப் பயணிகள் விபத்துகளுக்கு உள்ளாகியுள்ளதாக சீனத் தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று விபத்துக்கள் நீரில் மூழ்கியதுடன் தொடர்புபட்டுள்ளன.

இதில் இருவர் மரணித்துள்ளனர். 30 இற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள், ஒரு பாலியல் வன்புணர்வு, ஒரு பாம்புக் கடி விபத்து மற்றும் இரண்டு சுற்றுலாப்பயணிகள் தொடருந்திலிருந்து தவறிவிழுந்தமை, இலங்கையின் குடிவரவுத் திணைக்களத்தால் மூன்று சீனர்கள் தடுத்துவைக்கப்பட்டமை போன்ற பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கும் மேலாக, சில சீன சுற்றுலாப் பயணிகள் நகைக் கொள்ளையில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டனர். இவர்கள் மீண்டும் தமது நாட்டிற்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

கடந்த மார்ச்சில், சீனப் பயணிகளில் இருவர் கொள்ளையில் ஈடுபட்டதாக பதிவுசெய்யப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இலங்கைக்குச் செல்லும் சீனச் சுற்றுலாப்பயணிகள் அந்நாட்டின் உள்ளூர் சுற்றுலாத்துறைச் சட்டங்களை அவதானித்து, உள்நாட்டு நடைமுறைகள் மற்றும் வழக்காறுகளைப் பின்பற்றி, உள்நாட்டு உணவு, தங்குமிடம், போக்குவரத்து, இடங்களைப் பார்வையிடுதல், பொருட்களை வாங்குதல் போன்றவற்றிற்குச் செல்லும் போது தமக்கான பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்த வேண்டும்' என சீன அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட போக்குவரத்து எச்சரிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கையில் தேர்தல் இடம்பெறவிருந்த வேளையில் சீனாவின் இந்த நகர்வானது அரசாங்கத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

ஏனெனில் அக்காலப்பகுதியில் இலங்கையானது சீனப் பயணிகளைப் பொறுத்தளவில் ஒரு சொர்க்கபூமியாகத் தென்பட்டது. சீனாவின் இந்த அறிவிப்பானது இலங்கைக்கான ஒரு எச்சரிக்கையாக நோக்கப்பட்டது.

ஆனால் இலங்கையில் சீனப் பயணிகளால் முகங்கொடுக்கப்படும் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இந்த அறிக்கையை சீனா வெளியிட்டதா அல்லது சிறிலங்காத் தீவின் அரசியற் சூழலை மதிப்பீடு செய்வதற்காக இது வெளியிடப்பட்டதா என்பது ஆராயப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குத் திரும்பி வருவார் என்கின்ற அதீத நம்பிக்கையை சீனா கொண்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள்பிரவேசம் மூலம் தடைப்பட்டிருந்த கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என சீனா கருதியது.

சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை இந்தியா எதிர்ப்பதானது சீனா-மகிந்த ராஜபக்ஷ கூட்டணியானது இன்னமும் உடையவில்லை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த பொதுத் தேர்தல் பரப்புரையின் போது தெரிவித்திருந்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மகிந்த தோற்கடிக்கப்பட்ட போது, இது இந்தியாவிற்கான வெற்றி எனவும் சீனாவிற்கான தோல்வி எனவும் இந்திய மற்றும் அனைத்துலக ஊடகங்கள் விபரித்தன.

எவ்வாறெனினும், தடைப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை மீளவும் தொடர்வதற்கு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும்வரை சீனா காத்திருந்திருக்கும் எனக் கருதுவது மிகவும் கடினமானதாகும்.

இத்திட்டத்தை மீளச் செயற்படுத்துவதில் அரச மட்டத்தில் இந்தியாவின் எதிர்ப்பைக் குறைப்பதற்காகவும் இலங்கை வாழ் மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்காகவும் சீனா மிகப்பாரிய பரப்புரை நடவடிக்கையை முன்னெடுத்தது.

இப்பின்னணியில், சீனாவின் கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான பேச்சுக்களில் உள்ளடக்கப்படும் என இந்திய ஊடகம் அறிக்கை வெளியிட்டது.

சீனாவின் விருப்பின் பேரில் இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையுள்ளதாக பிரதமர் விக்கிரமசிங்க, பிரதமர் மோடியிடம் அழுத்தம் கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தத் திட்டமானது இரத்துச் செய்யப்படுமானால் இலங்கைக்கு எதிராக சீனாவானது அனைத்துலக நீதிமன்றின் முன்னால் செல்லும் என எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் நன்கறியும். இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிக்காது இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சீனா ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டம் தொடர்பில் கொழும்புடன் மீள்சமரசம் செய்வதற்கு சீனா உடன்பட்டுள்ளதாகவும் குறித்த செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இத்திட்டம் தொடர்பாக பொதுத் தேர்தலுக்கு முன்னர் இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்த கருத்தானது இங்கு ஆராயப்பட வேண்டும். 'சீனாவின் நிதியுதவியுடனான பாரிய திட்டம் ஒன்று சில மாத கால தாமதத்தின் பின்னர் மீளவும் ஆரம்பிப்பதற்கான ஒரு விட்டுக்கொடுப்பை இலங்கை மேற்கொள்கின்றது' என பொதுத் தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு வாரத்தின் முன்னர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

ஆசியாவிலிருந்து ஐரோப்பா வரை கடல் வழி பட்டுப்பாதைத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கான சீனாவின் மூலோபாய நகர்வானது இலங்கையின் அயல்நாடான இந்தியாவிற்கு எச்சரிக்கை மணியை எழுப்பியுள்ளது. (தொடரும்)

# அதிகரித்துவரும் முகநூல் பாவனையும் உள சமூகப் பிரச்சினைகளும்



கலாநிதி க.கஜவிந்தன்
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்.
மெய்யியல்/உளவியல்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

நூற்றாண்டுக்கு நூற்றாண்டு விருத்தியாகும் விஞ்ஞான மாற்றங்கள் என்ற பெயரில் கண்டுபிடிக்கப்படும் தொழில்நுட்ப சாதனங்கள் மக்கள் தேவைக்கு விருந்தளிப்பதாக அமைவதுடன் மனித தேடல்களுக்கு சாதனையாகவும் அவனது வாழ்க்கைக்கு சவாலாகவும் அமைகின்றது. ஒரு காலத்தில் உறவுகள் நேருக்கு நேர் பார்த்து தொடர்பு கொண்டாலே தவிர கருத்துகளையோ தகவல்களையோ பரிமாறுவது அரிது. தபால்களும், தந்திகளும் ஏதோ கொஞ்சம் உதவி செய்தன. காலப்போக்கில் போக்குவரத்து அதிகரிப்பு மற்றும் இணைய அமைப்புகள் வலையமைப்புகள் என்று தொடர்பாடலுக்கு தொலை தூரம் என்பது முற்றாக மாற்றப்பட்டு தொடு தூரமாக்கப்பட்டது.

நாம் விஞ்ஞான யுகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றோம் இதன் விளைவுகள் எனும் போது நன்மைகளுக்கு சமாந்தரமாகவும் சமமாகவும் பாதிப்புகளும் தீமைகளும் தமது வேலையை செய்து கொண்டேதான் இருக்கின்றன. அதன் போக்கிலே நோக்கும் போது இன்று மோசமான நிலையிலும் பயனுள்ள வகையிலும் பரவிக் கொண்டிருக்கும் ஒரு விடயமாகவே முகநூல்பாவனை(**Face Book**) காணப்படுகின்றது. எந்தவொரு விடயத்திற்கும் ஒரு மறைவான பக்கம் காணப்படும். அதனைப் போன்றே முகநூல் தொடர்பாடலும் தனது எதிர்ப்பக்கத்தைக் கொண்டு அனைவரது வாழ்க்கையையும் தனதாக்கிக் கொள்ள எத்தனித்துக் கொண்டு இருக்கின்றது. ஏனெனில் மிகக் குறுகிய கால வரலாற்றில் 800மில்லியன் பாவனையாளர்களை தமதாக்கிக் கொண்ட இம் முகநூல்வலையமைப்பின் சாதனை பேசப்படத்தக்க ஓர் விடயமாகவுள்ளது.

முகநூல பாவனை இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை தனது ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ள முனைகிறது என்றே கூறலாம். முன்பெல்லாம் "நேரம் பொன்னானது" என்று பொன்மொழிகள் உருவானதும் அதனை வீண் செய்வது கொலை செய்வது போன்றது என்றெல்லாம் அநேக கருத்துக்கள் தோன்றியுள்ளது. ஆனால் நேரத்தைப் போக்குவதற்கு பயன்படும் தொடர்பாடல் சாதனங்கள் இன்று அத்தனை பெறுமதியானவையாக மாற்றப்பட்டுள்ளன. இன்று கைபேசி இல்லாத இளைஞர்கள்இல்லை.அது போன்று முகநூல் இல்லாத நபர்களும் மிக அரிது.

தொடர்பாடலை இலகுவாக்கிக கொள்கின்றோம் துரிதப்படுத்திக் கொள்கின்றோம் என்பதனை கவனத்தில் கொண்டு தொடர்புகளுக்காக ஏதோ ஒருவருடன்இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இங்கு நண்பர் வட்டாரம் விரிவாவதும் நாட்டுக்கு நாடு செய்திகள் சுடச்சுட தகவல்கள் கடத்தப்படுவதும் என்னவோ நன்மையான விடயமாகவே உள்ளது. ஆனாலும் இதன் தாக்கம் பற்றிப் பேசுவதும் விழிப்புணர்வு அடைய வேண்டியதும் மிகவும் அவசியமானது ஒன்றாக உள்ளது.

இன்று பாடசாலை மாணவர்களாயினும் இளம் பராயத்தினராயினும் எதனையும் பரீட்சித்துப் பார்க்கும் ஆர்வம் கொண்டு உலக மாறுதல்களை கண்டறியவும் புதுமை புனையவும் எண்ணி முகநூலின் பகுதிகளுக்குள் நுழைந்து விடுகின்றனர். இம் முகநூலில் ஒருவர் தனது சுயத்தை அடையாளப்படுத்தும் முகமாகவோ அல்லது தனது சுய கருத்துக்களை வெளிப்படுத்தும் முகமாகவோ தனது தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். இங்கு வயது, இனம், மொழி, சாதி பேதம், நாடு நகரம் கடந்து நண்பர் வலையமைப்பினை விரிவாக்கிக் கொள்ளும் அளவு மிகவும் பரந்தளவிலான தொடர்பாடல் அமைப்பாக முகநூல் காணப்படுகின்றது.

முகநூல் எனப் பெயர் உண்டே தவிர உண்மையான முகங்களைக கண்டுகொள்ள முடிவதில்லை. ஆனால் இன்று ஆண்கள் பெண்கள் வேறுபாடின்றியும் அறிமுகம் இல்லாத அயல் நாட்டவர்களுடனும்கூட இலகுவில் நண்பர்களாக மாறிக் கொள்கின்றனர். இதன் விளைவுகள் என்ன? முகநூல் தொடர்புகள் பண மோசடிகளாகவும், காதல், கள்ள காதல் உறவுகளாகவும், ஏமாற்று திருமணங்களாகவும் எப்படியெல்லாமோ மாற்றப்பட்டு இளைஞர்கள், யுவதிகள் மோசமான உளப்பிரச்சினைகளுக்கு ஆளாகும் சூழலும் இன்று பெருகி வருகின்றது.

'எனது அயல்வீட்டு நண்பியின் முகநூல நண்பன் இன்று அவளைக் காதலித்து திருமணம் செய்து இருவரும் நல்ல முறையில் வாழ்கின்றனர்' என ஏதாவதொரு விதிவிலக்கை உதாரணமாகக் கொண்டு தமது வாழ்வை தவறான வழியில் இட்டுச் சென்று முகநூல் பாவனையால் வந்த உறவுகளால் சீரழிந்தவர்கள் ஏராளம் உண்டு. முகநூலில் மொட்டவிழும் அநேக காதல் இன்று பாரிய விளைவுகளை சந்தித்து தற்கொலையில் முடிகின்றன. இன்று இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முக்கியமான காரணமாக முகநூல் பாவனை அமைகின்றது. அதனைப் போன்றே தொழில் வேலைகளிலும் குடும்பங்களிலும் உறவுகளிலும் முகநூல் பாவனை பாரிய தாக்கம் செலுத்துகின்றன என்றே கூறலாம்.

தொழில் நேரங்களில் அலுவலக கணனிகள் முகநூல் பாவனைக்காக உபயோகிக்கப்படுதவனால் ஊழியர் வேலையில் அக்கறையின்மை, உற்பத்தி வீழ்ச்சிகள், நிறுவன ஊழியர்களிடையே தவறான உறவு நிலைமைகள் என்பன ஏற்படவும் இம் முகநூல்பாவனை காரணமாக அமைகின்றது. குடும்பங்களை எடுத்துக் கொண்டோமானால் கணவன்-மனைவி ஏன் பிள்ளைகளும் கூட முகநூலில் பல மணி நேரங்களை செலவிடுகின்றனர். இதனால் கணவன்-மனைவி உறவு நிலைக்குள் வீணான சந்தேகங்கள், மனக்கசப்புகள் ஏற்படுகின்றது. தேவையற்ற முகநூல்உரையாடல்கள், புகைப்பட பகிர்வுகள் அனைவராலும்விரும்பப்படுவதில்லை.

முகநூலில் அடிமையாக வாழ்பவர்களும் உள்ளனர். நேரம், காசு என்பன வீணாக்கப்படுவதுடன் தவறான பழக்கவழக்கங்கள், தேவையற்ற முன் மாதிரிகளின் பின்பற்றல்கள் இவர்களைத் தொற்றிக் கொள்கின்றன. விளம்பர மோகம் என்பது மனிதனுக்கே உரித்தானது. இன்று உணவுப் பொருட்கள் முதல் உடை அலங்காரங்கள் வரை முகநூல் தொடர்புகள் ஊடாக கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. வியாபாரத் தந்திரங்கள் மக்களை அடிமைப்படுத்தி மறைமுகமான அநேக இழப்புக்கள், பாதிப்புகளுக்கு முகம்கொடுக்கத் துணை போகின்றது.

இதனைப் போன்றே தேவையற்ற போதைப் பொருட்களின் விளம்பரங்கள் மற்றும் தவறான பாலியல் தொடர்பான வீடியோக்கள் என்பனவும் முகநூலின் மூலம் சமூகத்தில் பரவி வருகிறது. பெற்றோர்களும் முகநூல் பாவனையில் ஈடுபடுவதனால் பிள்ளைகளைக் கண்டிப்பது கடினமாக மாறியுள்ளது. இதைவிட பெற்றோரின் பிள்ளைகள் குறித்த அதிக நம்பிக்கை மற்றும் தொழில்நுட்பக் கல்வியை பெற்றுத்தரும் ஆசை என்பனவும் பிள்ளை முகநூல் அடிமையாக காரணமாக அமைகின்றது.

சில பெற்றோர்களின் அறியாமையினாலும் கல்வியறிவு இன்மையினாலும் பிள்ளைகளை கண்டு கொள்ளாது விடுகின்றனர். இதன் விளைவாக முகநூல் அடிமையாக மாறும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகமாகின்றது. இதனால் இவர்கள் தமது கல்வியில் அக்கறைகாட்டாமல் நகரத்திற்கு நகரம், நாட்டிற்கு நாடு நண்பர்களுடன் அரட்டையடித்துக் கொண்டு தமது ஆளுமையில் பிறழ்வுகளை உருவாக்க தெரிந்தோ, தெரியாமலோ அடித்தளம் அமைத்துக் கொள்கின்றனர்.

நண்பர்கள், காதலர்கள், கணவன்- மனைவி தமது முகநூலின் கடவுச் சொற்களை ஒருவருக்கொருவர் உறவு என்ற நம்பிக்கையில் தெரியப்படுத்துவது உண்டு.சிலர் இதனைத் தவறான வழிகளில் பயன்படுத்தி தவறான செய்திகளை வேறு ஒருவரின் முகநூல் முகவரியில் இருந்து அனுப்புதல் அல்லது இன்ரநெற் கடைகளில் முகநூலைப் பார்த்து விட்டு அதிலிருந்து உரிய முறையில் ஏனையவர்கள் பார்க்க முடியாதவாறு வெளிவராமை என்பன நிகழும் போது குறித்த முகவரியிலிருந்து தவறான படங்கள், ஆபாசமான விடயங்கள் மற்றும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் விடப்படுதல் என்பனவும் இடம்பெறுகின்றன.

பணத்தை பெற்றுக்கொள்ளவோ, தனிப்பட்ட தேவைகளுக்காகவோ ஒரு தனிப்பட்ட விடயங்கள் தொடர்பான இரகசிய வீடியோக்கள் மற்றும ஏனைய அச்சுறுத்தல், தகவல்கள் விடப்படுகின்றன. இவ்வாறு முகநூலில் பகிரப்படும் புகைப்படங்கள் தவறான முறையில் மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுதல் குறிப்பாக பெண் பிள்ளைகளின் புகைப்படங்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுதல் என்பனவும் குறிப்பிடத்தக்க ஓர் விடயமாக அமைகின்றது.

சமகாலத்தில் முகநூலை தனியார் மற்றும் பொது விழிப்புணர்வு அமைப்புகளும் பயன்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் இவைகளில் சில நிறுவன ஊழியர்கள் தமது பெயரைப் பிரபல்யம் செய்ய வேண்டி சில ஒழுக்கத்திற்கு புறம்பான தகவல்களை புகைப்படங்களுடன் வெளியிடுதல் மிகவும் தவறானதும் அது குறித்த நபர் அல்லது அவரை சார்ந்தவர்களை பாதிக்கப்படக்கூடிய விடயமாகும். உதாரணம்: காணாமற்போன 18 வயது பெண் பிள்ளையை கண்டுபிடித்தோம் என குறித்த பெண்ணின் புகைப்படத்துடன் வெளியிடுதலும், பாலியல் கொடுமை,சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றிற்கு உட்பட்டவரின் படத்தை தரவேற்றி அதை விபரித்து கருத்துத் தெரிவித்தலும் காணக் கூடியதாக உள்ளது.இது தனிநபர், சமூகத்தில் மறைமுகமான தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

அநேகர் முகநூலில் தமது கருததுக்களைப் பகிரும் போது தமது தனித்திறமைகளை காண்பிக்க வேண்டும் என எண்ணி பல்வேறான சுய விருப்பங்களை பிறரது கருத்துகளுக்கு விளக்கம் அளிப்பதற்காகவோ அல்லது கேலி செய்வதற்காகவோ கருத்துக்களைத் தெரிவிக்கலாம். இத்தகைய தன்மை பிறரது கோபத்தையும், எரிச்சலையும், கவலையையும் தூண்டுவதாக அமைந்து விடுகிறது. ஒருவருக்கு ஒருவர் போட்டியிட்டு நண்பர்களைச் சேர்த்துக்கொள்ளும் பழக்கம் தனக்கு விரோதமானவர்களை அல்லது பிடிக்காதவர்களை பற்றி தவறான கருத்துக்களை அவர்களது தனிப்பட்ட விடயங்களை முகநூலில் அனுமதியின்றி பதிவு செய்து அவர்களை அவமதித்தல் என்பனவும் முகநூல் குற்றங்களாகவே கருத முடியும்.

இங்கிலாந்து நாட்டில் செய்யப்பட்ட ஒரு ஆய்வின் படி முகநூல் தொடர்பான குற்ற செயல்கள் மூன்று ஆண்டுகளாக அதிகரித்துள்ளன எனவும் 40 நிமிடங்களுக்கு ஒரு முறை முகநூல் தொடர்பான குற்றச் செயல் ஒன்று பொலிசாரிடம் பதிவாகி உள்ளன எனவும் சென்ற ஆண்டில் மட்டும் 12ஆயிரத்து 300 குற்றங்கள் பதிவாகி உள்ளன என குறித்த ஆய்வு கூறியுள்ளது. இதனைப் போன்று கொலைகள், பாலியல் சுரண்டல்கள், வக்கிரங்கள் மற்றும் வன்போக்கு நடத்தைகள் என்பனவும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. குற்றவாளிகள் தம்மை இனங்காட்டிக் கொள்ளாமல் இருக்க தவறானதும் போலியானதுமான முகவரிகளை உருவாக்கி தவறுகளைத் துணிகரமாகச் செய்கின்றனர்.

முகநூல் , டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைத்தளங்களை அதிக நேரம் பயன்படுத்தினால் மனநிலை பாதிக்கப்படும் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.கனடாவைச் சேர்ந்த சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.இது தொடர்பாக அந்த நிறுவனம் ஆய்வு நடத்தியது. அப்போது 25% மாணவர்கள் நாளொன்றுக்கு இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக முகநூல் , டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்களை பயன்படுத்தியது தெரிய வந்தது.தமது இருப்பை அல்லது சுயத்தை நிலைநாட்ட, வெளிப்படுத்த அதிகமானவர்கள் சமூக வலைத்தளங்களை நாடுகின்றனர்.சிலருக்கு இதனால் மனத் திருப்தி ஏற்பட்டாலும் அது ஓர் வகை மனப்பிரம்மைதான்.தங்களின் தீராத மனக்குறைகளை தீர்ப்பதற்காக இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக சமூக வலைத் தளங்களை பயன்படுத்தினால் நாளடைவில் அதுவே மனநோயாக மாறக்கூடிய அபாயம் இருப்பதாக அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவுகள் (**Cyber Psychology**) சைபர் சைக்கொலஜி என்ற நூலில் குறிப்பி டப்பட்டுள்ளது.

முகநூல் காதல் தோல்விகள் நணபர் முரண்பாடுகளாலும், ஒரு தலைக் காதல் போன்ற விடயங்களாலும் தவறான கருத்துப் புரிதல்களாலும் சுயம் இழந்தவர்களாக அநேகர் தற்கொலை செய்து கொள்கின்றமையும் தம்மை தாம் ஒதுக்கி சமூக இடை வினையைக் குறைத்துக் கொள்கின்ற பண்பினையும் அதிகம் காணக் கூடியதாக உள்ளது. அநேகர் தமது சுய மதிப்பினை அதிகரிக்கும் நோக்கில் முகநூலில் இணைந்து கொண்டாலும் முடிவில் அதனைக் குறைத்துக் கொள்கின்ற பண்பினையும் காணமுடிகின்றது. தேவையற்ற கருத்துப் பரிமாற்றங்கள் என்பன பிரச்சினைக்குரியதாகவே அமைகின்றது. அநேகர் அரசியல் நாட்டம் உள்ளவர்கள்.அரசியல் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களை விபரீதமான முறையிலும் வன்முறையாகவும் கண்டிப்புடனும் பதிவு செய்தல்,விமர்சனம் செய்தல் என்பன அரசியல் அமைப்புக்களை கேலி செய்வதுடன் அரசு மற்றும் அரசியல் தந்திரங்களின் தாக்கங்களுக்கும் உள்ளாகின்றனர். இதன் விளைவாக தனி நபர் மாத்திரமல்லாது குடும்பம் மற்றும்சமூக அமைப்புக்களும் தேவை யற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் சூழல் ஏற்படு கின்றது.

இவ்வாறான தாக்கங்கள் விளைவுகள் இருக்கின்ற போதும் முகநூல் பாவனை முற்றாக தடை விதிக்கப்பட வேண்டிய ஒன்று என்பது இதன் கருத்தல்ல. ஏனெனில் தகவல் பரிமாற்ற வேகம், நண்பர்களின் ஒற்றுமை, வாழ்த்துக்கள், உதவிகள் வழங்கல், மற்றும் பாராட்டுக்கள், ஊக்கப்படுதல்கள் எனவும் பல்வேறு சமூக அமைப்புகளின் ஒருமைப்பாடுகள், இணைந்த செயற்பாடுகள் மற்றும் பல்வேறான விழிப்புணர்வுகள் என்பனவும் இம் முகநூல் பாவனையில்பயனுள்ள விடய மாக நடைமுறைப்படுத்துவதும் உண்டு.


எனவே நன்மைகளை மட்டும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் முன் கூறப்பட்டதான தவறுகள் சமூகத்தால் ஏற்க முடியாத சமூகவிரோத நடத்தைகள், வக்கிரங்கள் தவிர்க்கப்படுவதுடன் பயனுள்ள விடயங்கள் முகநூல் பாவனையில் மேலும் ஊக்கப்படுத்தல் வரவேற்கக்கப்படக் கூடியதாக அமையும். இவற்றினைக் கருத்திற் கொண்டு முகநூல் பாவனையாளர்கள் விழிப்புணர்வுடன் செயற்படும் போது ஒவ்வொரு தனிநபரும், குடும்பமும், சமூகமும் பாதிக்கப்படுவது குறைக்கப்படும் என்பது உண்மையே.



# சிறுவர் அரங்கம்

1248

## நண்பேன்டா!



**....தா**ன் நாள் முழுக்க வாசலில் காவலுக்கு இருந்ததால், தனக்கு எதுவும் தெரியாது என்று நண்பனுக்காகப் பொய் சொன்னது ஜிம்மி.

"எலிகளை வேட்டையாடுறதுல நான் ரொம்ப பிஸி, எனக்கு எப்படித் தெரியும்?" மின்னியும் தன் பங்குக்குக் கூறியது.

யோசித்தார் மூர்த்தி. "வேற யாரா வது வந்தாங்களா?" என்று கேட்டார்.

"யாரும் வரலியே!" இரண்டும் ஒரே குரலில் பதில் அளித்தன.

"அப்படின்னா உங்க ரெண்டு பேர்ல யாரோதான் இந்த வேலையச் செய்திரு க்கணும்.

உண்மை தெரியற வரைக்கும் யாரு க்கும் சாப்பாடு கிடையாது." - கோபத்து டன் சென்றுவிட்டார் மூர்த்தி.

வயிறு முட்ட மீனைச் சாப்பிட்ட மின்னி நன்றாகத் தூங்கியது.

"ஐயோ! பசி வயித்தைக் கிள்ளுதே! தப்பு செஞ்சிட்டு எப்படித் தூங்கறான் இந்த மின்னி!" தன் நிலையை எண்ணி வருந்தியது ஜிம்மி.

நள்ளிரவு திருடன் ஒருவன் வீட்டுக் குள் நுழைந்தான்.

உடனே உஷாரான ஜிம்மி, தன் சக் தியை எல்லாம் திரட்டிக் குலைத்தது.

திருடன் தப்பிக்காமல் பார்த்துக் கொண்டது. மூர்த்தி எழுந்துவர, சத்தம் கேட்டு பக்கத்து வீடுகளில் உள்ள வர்களும் ஓடிவர, பிடிபட்டான் திருடன்.

அவனைக் காவலர்களிடம் ஒப்படை த்தார் மூர்த்தி. மகிழ்ச்சியில் ஜிம்மியைத் தூக்கிக் கொண்டார்.

பால், பிஸ்கெட் கொடுத்தார். மூர்த்தி யின் அன்பைத் திரும்பப் பெற்றுவிட்ட திருப்தியில் சாப்பிட ஆரம்பித்தது ஜிம்மி.

மின்னிக்கு ஒரே பொறாமை. இரவு முழுவதும் யோசித்தது. விடிந்தவுடன் மூர்த்தியிடம் ஓடி வந்தது.

"திருடனைப் பிடிச்ச ஜிம்மியைப் பாரா ட்டினீங்களே! உங்க மர அலமாரில ஓட்டை போட்டு, உங்க சொத்துப் பத்திரங்களைச் சாப்பிட ஆரம்பிச்ச எலிகளை நான் வேட் டையாடிய விடயம் தெரியுமா?

அது பெரிய சாதனை இல்லையா?" என்று ஜிம்மியைப் பார்த்தபடி கேட்டது மின்னி.

அலமாரியைத் திறந்தார் மூர்த்தி.

அங்கே பிளாஸ்டிக் பை மட்டும் லேசா கக் கிழிந்திருந்தது.

பத்திரங்கள் பத்திரமாக இருந்தன.

"அடடா! பிரமாதம் மின்னி. நீங்க ரெண்டு பேருமே எனக்குப் பெரிய உதவி செஞ்சிருக்கீங்க!"

அடுத்த நொடி, அவர் மடி மீது தாவி அமர்ந்தது மின்னி.

"ஜிம்மியோட என்னை ஒப்பிடாதீங்க! நான் உங்க சொத்தையே காப்பாத்திருக் கேன். ஜிம்மியால ஒரு மீன் வறுவலைக் கூட காப்பாத்த முடியல!" என்று கிண்ட லாகச் சொன்னது மின்னி.

'அடப்பாவி' என்பது போல பார்த்தது ஜிம்மி.

"நீங்க ரெண்டு பேருமே நல்ல காரியம்தான் செஞ்சிருக்கீங்க! உங்களு க்கு இன்னிக்கு ஸ்பெஷல் சாப்பாடு சரியா! உங்க இடத்துல போய் உட்காருங்க!" என்றபடி உள்ளே சென்றார் மூர்த்தி.

ஜிம்மியும் மின்னியும் ஆவலோடு அமர்ந்திருந்தன.

ஜிம்மியின் தட்டில் எலும்பு சூப். மினனி யின் தட்டில் மீன் வறுவல். "வாவ்... சூப்பர்!" என்றபடி சந்தோசமாகச் சாப்பிட ஆரம்பித் தது ஜிம்மி.

"ஐயோ! மீன் வறுவல் நல்லாவே இல்ல" என்று முகத்தைச் சுளித்தது மின்னி.

"நீ எப்பவும் சாப்பிடற மீன் வறுவல் தானே மின்னி"

"நேத்து வெச்ச மீன் வறுவல் எவ்ளோ நல்லா இருந்துச்சி தெரியுமா? இன்னிக் குச் சகிக் கல!" என்று வாய் உளறி உண்மையைச் சொல்லிவிட்டது.

'அடப் பாவி! இப்படி மாட்டிக்கிட் டானே தன்னால' அதிர்ச்சியில் ஜிம்மிக் குப் புரையேறிவிட்டது.

"மாட்டிக்கிட்டியா? எனக்கு உன் மேல தான் சந்தேகமா இருந்துச்சு. தப்பு செஞ் சதுமில்லாம, ஜிம்மியை வேற மாட்டி விடறீயா?" கோபத்துடன் பார்த்தார் மூர்த்தி

"என்னை மன்னிச்சிடுங்க. இனி நான் திருட்டுத்தனமா எடுக்க மாட்டேன். பொய் சொல்ல மாட்டேன்" என்று தலை குனிந்தது மின்னி.

"தெரியாம பண்ணிட்டான். இந்த ஒருமுறை இவனை மன்னிச்சிடுங்க" என்று மின்னிக்காகப் பரிந்து பேசியது ஜிம்மி.

மூர்த்தியும் மன்னித்தார்.

ஜிம்மியை நன்றியோடு பார்த்தது மின்னி. 'பொய் சொல்றது, ஏமாத்துறது, மத்தவங்கள மாட்டி விடறது எல்லாம் மனுசங்க புத்தி.

இதெல்லாம் நமக்கெதுக்கு நண்பா?" என்றபடி மின்னியை அணைத்துக் கொண்டது ஜிம்மி.

(முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2015 24

- 622 - முகமது நபி மெக்காவிலிருந்து மதினாவுக்கு இடம் பெயர்ந்தார் (ஹிஜ்ரா).
- 1664 - நெதர்லாந்து நியூ ஆம்ஸ்டர்டாமை இங்கிலாந்துக்குக் கொடுத்தது.
- 1674 - பேரரசர் சிவாஜியின் இரண்டாவது முடிசூட்டு விழா (தாந்திரீக சடங்கு) இடம்பெற்றது.
- 1789 - அமெரிக்க உச்சநீதிமன்றம் நிறுவப்பட்டது.
- 1799 - கட்டபொம்மனும் இன்னும் 6 பேரும் புதுக்கோட்டை அரசன் விஜயரகுநாத தொண்டைமானால் கைது செய்யப்பட்டுப் பின்னர் செப் 29இல் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
- 1840 - இலங்கை வங்கி அமைக்கப்பட்டது.
- 1841 - புருணை சுல்தான் சரவாக் மாநிலத்தை பிரித்தானியாவுக்குக் கொடுத்தான்.
- 1869 - கறுப்பு வெள்ளி: ஜேய் கூல்ட், ஜேம்ஸ் பிஸ்க் என்ற இரு செல்வந்தர்களின் சூழ்ச்சியை முறியடிக்க அமெரிக்கா பெருமளவு தங்கத்தை விற்பனைக்கு விட்டதில், தங்க விலை சரிந்தது.
- 1898 - யாழ்ப்பாணம், இணுவிலில் பெண்களுக்கான மக்லியொட் மருத்துவமனையை அமெரிக்க மிசன் அமைத்தது.
- 1906 - வயோமிங்கில் உள்ள பேய்க் கோபுரம் அமெரிக்காவின் முதலாவது தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது.
- 1948 - ஹொண்டா நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1968 - சுவாசிலாந்து ஐ.நாவில் இணைந்தது.
- 1973 - கினி-பிசாவு போர்த்துக்கலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1979 - உலகின் முதலாவது மின்னஞ்சல் சேவையை கம்பியூசேர்வ் ஆரம்பித்தது.
- 1990 - சனிக் கோளில் பெரும் வெண் புள்ளி ஒன்று தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- 1902 - ருஹொல்லா கொமெய்னி, ஈரானிய அரசியல்வாதி (இ. 1989)
- 1936 - சிவந்தி ஆதித்தன் தினத்தந்தி உரிமையாளர்

**இறப்புகள**

- **2006 - பத்மினி, தென்னிந்திய நடிகை (பி. 1932)**
- 2009 - நாத்திகம் இராமசாமி, இதழாசிரியர், பகுத்தறிவாளர் (பி. 1932)

### பத்மினி



பத்மினி ஜூன் 12, 1932 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பிரபல இந்திய நடிகை ஆவார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிப்படங்களில் நடித்தும் நாட்டியமாடியும் புகழ் பெற்றவர். நாட்டியப் பேரொளி எனப் பெயர் எடுத்தவர்.

திருவனந்தபுரத்தில் பூஜாப்புர பகுதியில் பிறந்த பத்மினியின் பெற்றோர் தங்கப்பன் பிள்ளை, சரஸ்வதி அம்மா ஆவர். இவரது மூத்த சகோதரி லலிதா, இளையவர் ராகினி இருவரும் புகழ்பெற்ற நாட்டிய நடிகைகள். இவர்கள் திருவாங்கூர் சகோதரிகள் என அழைக்கப்பட்டனர்.

1961 ஆம் ஆண்டு, டாக்டர் இராமச்சந்திரன் என்பவரை மணந்தார்.

பத்மினி, நான்கு வயதில் நாட்டியம் ஆடப் பயின்றார். பத்து வயதில் அரங்கேறி, ஏறக்குறைய 64 ஆண்டுகள் நாட்டிய உலகில் புகழோச்சி நாட்டியப் பேரொளி என அழைக்கப்பட்டார்.

குச்சிப்புடி, மோகினியாட்டத்திலும் வல்லவர். 17 வயதில் திரையுலகில் புகுந்தார். கல்பனா என்ற இந்தி மொழிப் படத்தில் முதலில் தோன்றிய பத்மினி 250 படங்களுக்கு மேல் நடித்தார்.

தமிழில் முதன் முதலில் வேதாள உலகம் படத்தில் நாட்டியம் ஆடினார். என். எஸ். கிருஷ்ணன் தயாரித்த "மணமகள்" என்ற படம் தான் அவரது முதல் தமிழ்த் திரைப்படம்.

தமிழில் சிவாஜி கணேசன், எம். ஜி. இராமச்சந்திரன், ஜெமினி கணேசன் என அனைத்து முன்னணி நடிகர்களுடனும் இவர் நடித்திருக்கிறார். தில்லானா மோகனாம்பாள், இவரின் நடிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக சொல்லத்தக்க திரைப்படம் ஆகும்.

சிறந்த நடிகை விருது கலைமாமணி விருது, சிறந்த பரதநாட்டிய கலைஞர் விருது. பிலிம் ஃபேர் விருது, ஆகிய விருதுகளைப் பெற்றார். இவரை சோவியத் ஒன்றியம் அஞ்சல் தலை வெளியிட்டு கௌரவித்தது. இவர் செப்டம்பர் 24, 2006 அன்று இரவு மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

பலத்தினால்தான், சமாதானத்தை பெற இயலும். பலம் என்பது ஒற்றுமையால் கிடைக்கக் கூடியது. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சூதாடியது துரியோதனனாயினும் காயை உருட்டியது சகுனியே!

பாரதப்போர் இடம்பெறுவதுக்கு அடிப்படையாக அமைந்தது உரிமை விவகாரம் என்றாலும் சூதாட்டமே பாரதப் போருக்கான சபதத்தை தோற்றுவித்தது.

துரியோதனனும் தருமரும் சூதாடியிருந்தால் தருமருக்கே வெற்றி கிடைத்திருக்கும். ஆனால் சூதாட்டத்தில் துரியோதனன் ஈடுபட்டாலும் காயை உருட்டியது சகுனியே.

சகுனியின் விரல் அசைவுகளுக்கேற்ப காய் உருளுகின்ற மாயத்தால் தருமர் அனைத்தையும் இழந்தாராயினும் கௌரவர் சேனை தன் வம்சத்தையே இழந்தது.

சூதாட்டம் நடந்ததன் காரணமாக பாண்டவர் துணையாள் பாஞ்சாலி போர் எனச் சபதம் எடுத்தாள். இது இதிகாசக் கதையாயினும் இதற்குள் நிறைந்த உண்மைகளும் தத்துவங்களும் உள்ளன.

இன்றைய யதார்த்தத்திலும் இவை நடந்து கொள்கிறது. பாத்திரங்களும் நடக்கும் இடங்களும் கருப்பொருள்களுமே வேறுபட்டவை. மாறாக அதர்மத்தின் அக்கிரமத்தை எதிர்க்க தர்மம் போராடிக் கொண்டே இருக்கிறது.

இப்போது எங்கள் வடக்கு மாகாண சபையை பார்த்தீர்களாயின் தமிழர்களுக்கு ஏன்தான் இப்படியொரு அரசு கிடைத்தது என்று எண்ணத் தோன்றுகிறது. அதர்மவாதிகள் சிலருடன் நீதியரசர் விக்னேஸ்வரன் போராட வேண்டியுள்ளது.

அவரை எதிர்க்க வேண்டும் என்பதற்காக வெளியில் இருக்கும் அரசியல்வாதிகள் சிலர், மாகாண சபை உறுப்பினர் சிலரை உசுப்பேத்திவிட அவர்கள் முதலமைச்சரை கேள்வி கேட்பதற்குத் தலைப்படுகின்றனர்.

முதலமைச்சரிடம் கேள்விகேட்பது ஜனநாயகமாயினும் ஒரு எதிர்ப்போடு; காழ்ப்புணர்வோடு; பழிதீர்க்கும் நினைப்போடும் கேள்வி கேட்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

எங்களின் முதலமைச்சருக்கு முதலில் நாங்கள் மதிப்புக் கொடுக்கவேண்டும். சபையை நடத்துபவர்கள், சட்டங்களை அனுசரித்தோடு சபை உறுப்பினர்கள் அனைவரையும் சமமாக நடத்தவேண்டும்.

ஓரவஞ்சமாகச் செயற்படுவது, வாக்களித்து சபைக்கு அனுப்பிய மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும். முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தால் அதனை எதிர்த்து தமிழ் மக்கள் கிளர்ந்தெழுவர் என்பதற்காக ஒரு சில உறுப்பினர்களைத் தூண்டிவிட்டு முதலமைச்சருக்கு எதிராக செயற்படுவதானது, தமிழருக்கு மாகாணசபையைக் கூட ஒழுங்காக நடத்தமுடியாது என்பதையே சர்வதேசத்துக்கு காட்டிநிற்கும்.

வடக்கு மாகாண சபையின் ஆளும்வர்க்கமே பிரிந்து நின்று வாதப் பிரதிவாதம் நடத்துகிறது எனில் தமிழ் மக்களுக்கு உங்களால் என்ன செய்துவிட முடியும்?

தேர்தல் காலங்களில் மட்டும் உங்கள் பிரசாரங்கள் பொறிபறக்கின்றன. ஆனால் பதவிகிடைத்தபின் நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை நீங்களே ஒரு கணம் சிந்தித்துப்பாருங்கள் என்று உங்களை கேட்பதன் மூலம் வடக்கு மாகாணசபை ஒழுங்காக நடக்கும் என்று நாம் நினைக்கவில்லை.

ஆகவே, அன்பான தமிழ் மக்களே! நீங்கள் ஒரு கணம் சிந்தியுங்கள். வடக்குமாகாண சபையில் ஒரு சிலர் முதல்வருக்கு எதிராக செயற்படுவதும் அவர்களை உள்ளும் புறமும் நிற்பவர்கள் தூண்டி விடுவதும் அதன் மூலம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தானாக விலகிப் போகச் செய்வதுமான இந்தக் கொடுமைத் தனங்களை – அதைச் செய்பவர்களை நீங்களே அவதானித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் அவதானிப்பு என்றோ ஒருநாள் இவர்களுக்கு தீர்ப்பு எழுத நிச்சயம் உதவும்.

# வடக்கு விவசாய அமைச்சால் போதனாசிரியர்கள் நியமனம்

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாக 22 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்ச்சி வடமாகாண விவசாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் விவசாயப் போதனாசிரியர்களுக்கென 161 ஆளணி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனினும் அண்மையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட விவசாயப் போதனாசிரியர்களுடன் சேர்த்து 98 பேரே இப்பணி நிலையில் தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

விவசாயப் போதனாசிரியர் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு விவசாயத்தில் டிப்ளோமா பட்டமும் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், இத்தகைமைகளுடன்போதிய விண்ணப்பதாரிகள் இல்லாமையிலேயே விவசாயப் போதனாசிரியர் வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாது உள்ளன. இதனைக் கருத்திற் கொண்டு, விவசாய அமைச்சு விசேட அனுமதி பெற்று அண்மையில் விவசாயப்பட்டதாரிகளையும் விவசாயப் போதனாசிரியர்களாக உள்ளீர்த்தது. எனினும், விவசாயப்பட்டதாரிகளும் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் ஏனைய வெற்றிடங்களை முழுமையாக நிரப்ப முடியவில்லை.

விவசாயப் போதனாசிரியர் பற்றாக்குறைவால் விவசாய விரிவாக்க நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதால, விவசாய டிப்ளோமா பட்டம் பெறாமல் க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களையும் பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாக உள்ளீர்ப்பதற்கு வடக்கு விவசாய அமைச்சு விசேட அனுமதிபெற்று சமீபத்தில் நேர்முகத் தேர்வு ஒன்றை நடத்தியிருந்தது.

இத்தேர்வின் அடிப்படையிலேயே தற்போது புதிதாக 22 பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் விவசாயப் பாடத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றால் விவசாயப் போதனாசிரியர்களாகத் தரமுயர்த்தப்படுவார்கள் எனவும், இக்கற்கைநெறியைப் பயில்வதற்கான ஏற்பாடுகள் விவசாயத் திணைக்களத்தால் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நியமனங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், பிரதம செயலாளர் அ.பத்திநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைகளப் பணிப்பாளர் சி.வசீகரன், பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜெ.ஜெயதேவி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

செல்லையா குமாரசாமியின் பாட்டுப்பாடுவோம் எனும் தலைப்பிலான கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இணுவில் அறிவாலயத்தில் வலிகாம திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-12)

## இறுவெட்டு வெளியீடு

புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தின் பொன்விழா ஆவண இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு கழக மைதானத்தில் பொன் விழாக்குழுவின் தலைவர் நா. செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்க கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதேவேளை விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, புத்தூர் கிழக்கு கிராம சேவகர் வெ. கோபாலதாஸ், புத்தூர் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் செ.ஜெயபாலன், ஜெகதாம்பிகை சமேத வேத பரீஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ.மு. தயாபரக் குருக்கள், கொழும்பு சுவிஷேச சபையின் போதகரும் சிவில் நிர்வாக பாதுகாப்புத் தலைவருமான அருட்பணி அன்ரனி லாசர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஓய்வு நிலை அதிபர் நா.சிவஞானம் தலைமையில் இறுவெட்டு வெளியீடு இடம் பெறவுள்ளதுடன் இறுவெட்டு வெளியீட்டுரையினையும் வழங்கவுள்ளனர்.

மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக வணிகப்பீடம் முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி வேல்நம்பி, ஓய்வு நிலை ஆசிரியர் கவிஞர் வே. இளையகுட்டி ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

## இந்திய மீனவர்களுக்கு ஒக்டோபர்வரை விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகபட்டினத்தைச் சேர்ந்த 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 15 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இவர்கள் பருத்தித்துறை நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9)

## சத்திய தரிசனம்



### கைகொடுப்பார் கடவுள்

❖ கடவுள் மீது முழு நம்பிக்கை வையுங்கள். அவரின் வழிகாட்டுதல் கரை சேர்க்கும்.


❖ யாரையும் திசை மாற்ற வேண்டாம். உண்மைக்குப் புறம்பாக எதையும் திரித்துக் கூறாதீர்கள்.

❖ பொறுமையும், விடாமுயற்சியும் உங்களிடம் இருந்தால், வெற்றி வந்து சேரும்.

❖ துன்பம் கண்டு துவளாதீர்கள். தக்க சமயத்தில் கைகொடுக்க கடவுள் அருகிலேயே காத்திருக்கிறார்.

❖ குறை காணும் பழக்கத்தை விட்டொழியுங்கள். பிறரிடம் உள்ள நல்லதை மட்டுமே காணுங்கள்.

❖ செய்த உதவியை ஒரு நாளும் மறப்பது கூடாது.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மிகத் தகவல்கள்

### அனுமாருக்கும் திருமாலுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? தேகபலம், புத்தி பலம், பிராண பலம் கிடைக்க என்ன செய்யலாம்?

மார்கழி மாத மூல நட்சத்திரத்தில் அஞ்சனை மைந்தனாய் தோன்றியவன் அனுமன். சுரணகதி புத்தியினாலேயே வெற்றி பெற்றவன். அனுமனுக்கும் திருமாலுக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. திருமால் திருமகளை தன் மார்பில் தாங்கியிருக்கிறார். அனுமன் இராமனை தன் மார்பில் தாங்குபவன். கிருஷ்ணன் பாண்டவருக்காக துரியோதனனிடம் தூது சென்றார். அனுமரோ இராமனுக்காக இராவணனிடம் தூது சென்றான்.

கிருஷ்ணன் கோவர்த்தன மலையை தூக்கி மழையில் இருந்து ஆயவர்களைக் காத்தான். அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கி போர்க்களத்தில் மயங்கி விட்ட இலட்சுமணனையும் குரங்குகளையும் காத்தான்.

வெண்ணெய் உண்டவர் கிருஷ்ணர். வெண்ணெயை பூசிக்கொண்டவர் அனுமன். அனுமன் பிறந்த நாளில் வடைமாலை, வெற்றிலை மாலை, வெண்ணெய்க்காப்பு சாற்றி வழிபட நன்மைகள் பெருகும். சுத்தமான விரதம் மேற்கொள்ள எண்ணிய காரியம் ஈடேறும். அனைத்துவித பலமும் வந்து சேரும்.

ஜக்சன் அதிரடி

## கழுகுகளின் உதைபந்தாட்டத் தொடர்

# மன்னார் சென்.லூசியஸை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு நுழைந்தது சென்.மேரிஸ்









ஜக்சனின் அதிரடி ஆட்டத்தால் மன்னார் சென். லூசியஸை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு நுழைந்தது நாவாந்துறை சென். மேரிஸ விளையாட்டுக்கழகம்.

நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாம் அரை இறுதி ஆட்டம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் பலம் பொருந்திய அணிகளான நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க. எதிர்த்து மன்னார் சென். லூசியஸ் வி.க. மோதியது.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பான போட்டியாக காணப்பட்டது. தொடக்கத்தில் இருந்து லூசியஸ் அணியின் கட்டுப்பாட்டிற்குள் பந்து அதிகமாகக் காணப்பட்டது. short pass long pass attack என மேரிஸை அச்சுறுத்தினர். மேரிஸ் அணியும் ஆரம்பம் முதல் தடுத்தாடுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. முதல்பாதி ஆட்டத்தில் லூசியஸ் அணி கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்தும் மேரிஸின் பின்கள நடுக்கள வீரர்களின் போராட்டத்தால் முழுமையாகத் தடுக்கப்பட்டது. 2 அணியின் கோல் காப்பாளர்களதும் பரப்புக்குள் ஒரு சில பந்துகளே சென்றது. தொடர்ந்து முதல் பாதி லூசியஸ் அணியின் ஆதிக்கத்துடன் 0:0 என்ற முடிவுக்கு வந்தது. 2 ஆவது பாதியின் ஆரம்பத்திலும் லூசியஸ் அணியின் ஆதிக்கம் தொடர்ந்தது. கோல் பரப்புக்குள் ஒரு சில பந்துகளே சென்றாலும் தங்கள் கட்டுப்பாட்டில் பந்தினை வைத்திருந்தனர். ஆயினும் மேரிஸ் அணி **counter attack** என்ற நுட்பத்தை பயன்படுத்தினர். முழுமையான **diffending** கோடு ஒரு **attack** என்ற நுட் பத்தை பயன்படுத்தி தாக்குதலும் நடத்தினர். அவ்வாறே 57 ஆவது நிமி டத்தில் மேரிஸ் அணியின் தலைவர் ஜக்சன் 2 பேரை எளிதாகக் கடந்து கோலினை நோக்கி உரமாக அடித்த பந்து கோலாக மாற யாழ்.மாவட்ட உதைபந்து பிரியர்கள் மனம் குளிர்ந்தது. ஆயினும் மேரிஸ் அணி தடுத்தாடுவதிலேயே குறியாக இருந்தது. தொடர்ந்து 69 ஆவது நிமிடத்தில் நடுக்கள வீரர் தங்கன் கொடுத்த பந்தை ஜக்சன் கோலாக மாற்ற 2:0 என வெற்றி மேரிஸ் பக்கம் சாய்ந்தது. 83ஆவது நிமிடத்தில் லூசியஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கி கோல் ஒன்று பெறப்பட்டது. ஆட்டநேர முடிவில் சென். மேரிஸ் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இரண்டு கோல்களை அடித்த ஜக்சன் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

காட்சிப்போட்டியாக இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் அல்வாய் நக்கீரன் வி.க. எதிர்த்து மன்னார் சென். லூசியஸ் வி.க.மோதியது. இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாது ஆட்டட சமநிலையில் நிறைவு பெற்றது. (க)

# பாடசாலைகளுக்கிடையில் தேசிய மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## சாகிரா, பரக்கும்பா பாடசாலைகள் சம்பியன்





இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடரின் 19வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணி சம்பியனாகியது.

நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பொல்கஹவெல பரக்கும்பா தேசிய பாடசாலை அணி தேசிய அகில இலங்கை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மரியஸ்ரெலா கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிரா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் ஆட்ட நேர முடிவில் கொழும்பு சாகிரா கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் இளவாலை சென்.கென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து தர்மராஜா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.கென்றிஸ் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

இடம்பெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் குருநாகல் மாலிகதேவா மகளிர் கல்லூரியும் பொல்கஹவெல பரக்கும்பா தேசிய பாடசாலையும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று தாம சளைத்தவர்கள் இல்லையென்ற நிலையில் மோதிக்கொண்ட போதிலும ஆட்ட நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சமநிலையில் காணப்பட்டன.

இந்நிலையில் வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து பொல்கஹவெல பரக்கும்பா தேசிய பாடசாலை 3:1 என்ற கோல்கள் கணக்கில் மாலிகதேவா மகளிர் கல்லூரியை வெற்றி பெற்று தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

வெற்றிபெற்ற அணிகளுக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.உதயகுமார் பதக்கங்களை அணிவித்து கௌரவித்ததுடன் வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழ்களையும வழங்கினார். (க)

# முல்லை.மாவட்ட விளையாட்டு விழா


27 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் முல்லைத்தீவு மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் இன்று மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டநிகழ்வும் 10 ஆயிரம் மீற்றர் வேகநடை மற்றும்பெண்களுக்கான 5ஆயிரம் மீற்றர் ஓட்டநிகழ்வும் 5ஆயிரம் மீற்றர் வேகநடை ஆகிய போட்டிகளும் தடகள போட்டிகளும் இடம்பெற்றும் மாலை மூன்று மணிக்குபாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜாவின் பங்குபற்றலுடன் வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ் வீழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

மாவட்ட மட்ட போட்டிகளிலே உதைபந்து போட்டியில் முதலாமிடத்தை பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும் எல்லே ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணி மற்றும் பெண்களுக்கான எல்லே போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும் பெண்களுக்கான மென்பந்து போட்டியில் முதலாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி மற்றும் ஆண்களுக்கான மென்பந்து போட்டியிலே முதலாமிடத்தை பெற்ற கரைதுறைப்பற்று பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற புதுக் குடியிருப்பு பிரதேச அணியினருக்கும் பெண்களுக்கான கரப்பந்து போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணி மற்றும் ஆண்களுக்கான கரப்பந்து போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணி இரண்டாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும் கபடி ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மாந்தை கிழக்கு பிரதேச அணியினருக்கும் பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற மணலாறு பிரதேச அணியினருக்கும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும் ஆண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும் கரம் ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச அணியினருக்கும் இரண்டாமிடத்தை பெற்ற துணுக்காய் பிரதேச அணியினருக்கும் மற்றும் தடகள போட்டிகளில் வெற்றியீட்டுவோர் மற்றும் புள்ளியடிப்படையில் வெற்றிபெறும் பிரதேச சம்மேளனம் ஆகியவற்றிற்கான வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறுமெனவும் குறித்த நிகழ்வில் மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற அணியினரை இறுதிநிகழ்வுகளில் கலந்து கொண்டுதங்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சசிக்குமார் அறிவித்துள்ளார். (க-281)

# கணவனைத் தாக்கிவிட்டு மனைவியை கடத்திய சம்பவம்

## பொலிஸாரின் விரைவால் பெண் மீட்பு; இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

வீட்டில் கணவன், மனைவி தனித்திருந்தவேளை, கணவனை தாக்கி விட்டு மனைவியை கடத்தி சென்ற சம்பவம் வேலணையில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்றுள்ளது.

இக் கடத்தல் சம்பவத்தினால் வேலணையில் நேற்று முன்தினம் பெரும் பதற்றம் நிலைவியதோடு கடத்தப்பட்ட பெண்ணை பொலிஸாரும் பொதுமக்களும் சேர்ந்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இத்தேடுதலின் பின்னர் கடத்தலின் சூத்திரதாரிகள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதோடு பெண்ணும் மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலையைச் சேர்ந்த 20 வயதுடைய யுவதியொருவர் வேலணை சரவணையில் உள்ள இளைஞருடன் திருமணம் முடிந்து கடந்த 6 மாதங்களாக வாழ்ந்து வருகின்றார்.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை குறித்த இளம் குடும்பத்தினர் வசிக்கும் வீட்டுக்குச் சென்றஇருஇளைஞர்கள் கணவனைத்தாக்கிவிட்டு பெண்ணை கடத்திசென்றுள்ளனர்.

இத்னையடுத்து உடனடியாக செயற்பட்ட கணவர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 இற்கு அழைப்பினையேற்படுத்தி முறையிட்டுள்ளார்.

பின்புசம்பவ இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறை பொலிஸார் கடத்தல் காரர்களைத்தேடி வலை வீசினர். பொலிஸாருக்கு ஒத்துழைப்பாக பொதுமக்களும் வீதியிலிறங்கி தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த பெண் வேலணையிலுள்ள கடற்கரையொன்றில் கடத்தி வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டு மீட்கப்பட்டதுடன் கடத்தல் நபர்கள் இருவரும் நேற்று அதிகாலை ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த கடத்தல் சம்பவம் குடும்பப் பிணக்கின் காரணமாக இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்த ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் சந்தேக நபர்கள் இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் 28, 31 வயதுடையவர்களோடு, திருமணம் முடித்த குடும்பஸ்தர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4,60)

# பௌர்ணமி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று மாலை 6.30 மணியளவில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் தலைவர் ஆர்.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு முன்னாள் தொடர்பு கல்வி ஆலோசகர் கு.தர்மசிறிராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இதில் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையாவினுடைய சிறப்பு சொற்பொழிவும் சிறுவர்களின் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (செ-12)

# காதலனுடன் தொலைபேசியில் பேசிய பேர்த்தியை கொலை செய்த தாத்தா

(சென்னை)

தன் காதலனுடன் கையடக்கத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த பேர்த்தியை அவரது தாத்தா கழுத்தை அறுத்து கொலை செய்த சம்பவம் இந்தியா - கடலூர் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்திய கடலூர் மாவட்டம், ஆண்டிப்பாளையத்தைச் சேர்ந்த வீராசாமி என்பவரின் பேர்த்தி ரமணிதேவி (19). இவர் தன்னுடன் கல்லூரியில் படிக்கும் மருதநாயகம் (24) என்பவரை காதலித்து வந்துள்ளார்.

பெற்றோர் இவர்களது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் ரமணிதேவி தன் காதலை விடவில்லை. கையடக்கத் தொலைபேசியில் பேசுவது, வெளியில் சந்தித்து பேசுவதுமாக இருந்தார்.

ஒருமுறை கல்லூரிக்குச் சென்ற ரமணிதேவி வீடு திரும்பவில்லை. கடைசியில் அவர் தன் காதலன் வீட்டுக்குச் சென்றுவிட்டதாகவும், மருதநாயகத்தின் பெற்றோர்கள் அவர்களது காதலை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் ரமணியின் வீட்டாருக்கு தெரிய வந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ரமணியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த தன் பின்னர் காதலர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

பின்னர் பொலிஸார் காதலர்களுக்கு அறிவுரை கூறி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ரமணிதேவியை வீட்டார் அவரை வீட்டில் சிறை வைத்தனர்.

இந்நிலையில், ரமணிதேவி நேற்று முன்தினம் காலை தனது அறையில் தன் காதலன் மருதநாயகத்துடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருப்பதை அவருடைய தாத்தா கண்டுள்ளார்.

இதை தொடர்ந்து கோபமடைந்த தாத்தா ரமணிதேவியின் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார்.

பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# விரிவுரையாளருக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அரச தொழிநுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணத்தில் சகல பாடங்களுக்குமான பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் 04.09.2015 அரச வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளின் கல்வித்தகைமை, தொழிற்தகைமை, அனுபவம் என்பவற்றுடன் பயிற்சி நெறிகளின் தரம் என்பவற்றுக்கமைய ஒரு மணித்தியாலத்துக்கு 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை வேறுபடும்.

விண்ணப்பபடிவம், ஏனைய விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# மத்தியஸ்த சபை அமர்வு சனிக்கிழமை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்தியஸ்த சபையின் அமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது என யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபையின் தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் அறிவித்துள்ளார்.

வழமைபோல் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியிலே மேற்படி அமர்வு நடைபெறும். பிரதி ஞாயிறுக்கிழமை தோறும் இடம்பெற்று வருகின்ற மேற்படி மத்தியஸ்த சபை அமர்வு இவ் வாரம் மட்டும் சனிக்கிழமை அன்று நடைபெறும்.

27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி முக்கிய பரீட்சை நிலையமாக அமையவுள்ளதால் இம் மாற்றம் ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வடபகுதி மீனவர்கள் நேற்று...

சென்று மாவட்ட செயலகத்தை சென்றடைந்து பின்பு மருதடி வீதியிலமைந்துள்ள யாழ்.இந்திய துணைத் தூதரகத்தினை வந்தடைந்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம், யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம், யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் ஆகிய சங்கங்கள் இணைந்து முன்னெடுத்திருந்த இப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழையும் இந்திய படகுகளை பறிமுதல் செய்யுங்கள், இந்திய அரசே எங்களை வாழவிடு, எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய், எம் வாழ்க்கைத் துயர் நீங்க அரசே உடன் செயற்படு என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டகாரர்கள் பேரணியில் ஈடுபட்டிருந்தனர்.

எம்முடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் மீது இனியும் நடவடிக்கையெடுக்காவிட்டால் அகிம்சை வழிப் போராட்டம் கண்டனப் போராட்டமாக மாற்றமடையும்.

இரு அரசுகளும் எல்லை தாண்டும் மீனவர்கள் மீது சட்டங்களை பிரயோகிக்கா விட்டால் சட்டத்தை நாம் கையிலெடுக்க நேரிடும் என மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இவ் பேரணியில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன் உள்ளிட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணியின் முடிவில் யாழ். இந்திய துணைத்தூதர், யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு மீனவர்களின் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (செ-4)

# கலப்பு நீதிமன்றம் உள்ளி...

தீர்மான வரைவில் உள்ள 26 பந்திகளில் 14 பந்திகளை முற்றாகவே நீக்கி, தீர்மான வரைபை மென்மைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கப் பரிந்துரைக்கும் பந்தி முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக சர்வதேச தரம் வாய்ந்த உள்நாட்டு பொறிமுறைக்கு ஆதரவான பந்தி சேர்க்கப்பட வேண்டும என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன், சாட்சிகளைப் பாதுகாத்தலை வலுப்படுத்தல், காணிகளை மீள ஒப்படைத்தல், ஊடகவியலாளர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த விசாரணை, நீதிக்குப் புறம்பான படுகொலைகள் குறித்த விசாரணை, மனிதவுரிமைகள் குறித்து ஆவணப்படுத்தும் பொறிமுறை, அதிகாரப்பகிர்வு, பாலியல் வன்முறைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களின் அறிக்கைகளுக்குப் பதிலளித்தல் போன்றவற்றுக்கு அழைப்பு விடும் பந்திகளையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமெரிக்காவின் தீர்மான வரைபில் உள்ள 26 செயற்பாட்டு பந்திகளில் 14 பந்திகளை முற்றாகவே நீக்க வேண்டும் என்றும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கும் ஐந்து விடயங்களின் மொழிநடையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (செ-12)

# அமெரிக்க தீர்மான வரைபில் 4வது பந்திக்கு சீனா, ரஷ்யா எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான அமெரிக்காவின தீர்மான வரைவில் சர்வதேச நீதி பதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத் துக்குப் பரிந்துரை செய்யும் 4-வது பந்தியை நீக்க வேண்டும் என்று ரஷ்யா, சீனா போன்ற நாடுகள்நேற்று முன்தினம்வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவாவில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான இரண்டாவது முறைசாராக் கூட்டத்தில் இந்த 4-வது பந்தியை நீக்க வேண்டும் என்று இலங்கை தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதற்கு ஆதரவாக ரஷ்யாவும், சீனாவும் தமது கருத்துக்களை முன்வைத்தன.

இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால், இந்த 4-வது பந்தியை நீக்க வேண்டும் என்றும், தீர்மான வரைபின் மொழிநடை மென்மைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்நாடுகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, கலப்பு நீதி மன்றத்தை அமைக்க வேண்டும் என்ற பரிந்துரையை உள்ளடக்கிய 4-வது பந்தியை நீக்குவதற்கு சுவிற்சர்லாந்து, நோர்வே, நெதர்லாந்து, அயர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. (செ-12)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
09 - 03 - 1943



நோயின் பிடியில்
26 - 09 - 2012

அமரர் ஆறுமுகம் வேலும்மயிலும்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

மூன்றாண்டாகியதோ மூலவரே உமை இழந்து
இன்றும் நீர் இருந்திருந்தால்
எண்ணும் போதினிலே எம்
இதயங்கள் வேதனையில் துடிக்குதய்யா
இப்போதும் ஊரினில் உம் மதிப்பு மறையவில்லை
வேறென இருந்தெமை வழிநடத்தியவரே
ஆண்டாண்டாய் உம் ஆத்மாவை அஞ்சலித்தபடி
ஆறாத துயருடன் தொடர்கிறோம் எம் பயணம்

திருநாவலூர்,
புலோலி மேற்கு
பருத்தித்துறை.

(C-2287)

என்றும் மறவா
பிரிவுத் துயருடன்
குடும்பத்தினர்

## நீதிமன்றத்தாக்குதல்...

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படு கொலையைக் கண்டித்து கடந்த மே மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 21 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்தனர். அவர்களுடன் கடந்த வாரமளவில் கைது செய்யப்பட்ட 2 பேரும் விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களை காயப்படு த்தியமை, சிறைச்சாலை வாகனங்களை சேதப்படுத்தி பொதுச்சொத்துக்களுக்கு பங்கம் விளைவித்தமை மற்றும் சட்டவிரோத கூட்ட ங்களில் கலந்து கொண்டமை போன்ற குற் றச் சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர்களுக்கெதி ராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவர்களுடைய வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதவான 3பேரை பிணையில் செல்ல அனுமதித்த தோடு ஏனைய 20 சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (செ-9)

## ஜனாதிபதி நேற்று...

ஸிலாந்து பிரதமர் ஜோன் கீ, அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேன்புல் உட்பட பல உல கத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் பீட்டர் மோரர், ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கெனத் ரொத் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிரு த்தி நிகழ்ச்சித்திட்ட நிர்வாகத்தர் ஹெலன் கிலாக் ஆகியோர்களையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புனர்வாழ்வு, மீள்குடியே ற்ற மற்றும் இந்து சமயவிவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், நீதி, புத்தசாசன அமை ச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மற்றும் திறன் விருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்கவும ஜனா திபதியுடன் இப்பய ணத்தில் இணை ந்து கொண் டுள்ளனர் என்று ஜனாதிப்தி ஊடகப் பிரிவு வெளியிட்டு ள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி இந்தப் பயணத்தின்போது அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமாவு டன் இரு நாட்டு உற வு தொடர்பில் முக் கிய பேச்சு நடத்து வார் எனவும் கூறப் படுகின்றது.(செ-12)

## சட்டமூலம் தொடர்பில்...

எதிரான சட்டமூலம் ஒன்றை உருவாக்குவ தற்கான ஐவர் கொண்ட தெரிவுக்குழு தற் போது அறிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவராக பொலிஸ், சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன செயற்படுவார். குழுவின் அங்க த்தவர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ஹேரத், பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவ கார அமைச்சர் சந்திராணி பண்டார, சிறு வர்கள் விவகாரம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நகர திட்டமிடல் மற்றும் குடிநீர் வழங்கல் ராஜா ங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் குழுவின் அங்கத்தவர்க ளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (செ-12)

## சர்வதேச...

கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் உள்ள மனித உரிமைகளுக்கு பொறுப்பான அதிகாரியான பிரடீப் வாலே என்பவரிடம் கையளிக்கபபட்டது.

மேற்படி கையொப்பங்களின் மூலப் பிரதி கள் சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைக் கான தமிழர் செயற்பாட்டுக் குழுவின் சார்பில கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , அலன் சத் தியதாஸ், மற்றும் சட்டத்தரணி விவேகானந் தன் புவிதரன் ஆகியோர் நேரில் சென்று கையளித்திருந்தனர்.

மேற்படி கையளிப்பு நிகழ்வு நேற்று புதன் கிழமை பிற்பகல் இடம்பெற்றது. (செ-12)

## கல்வி...

வசம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் இந் நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வர னும் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)


DIPLOMA IN SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்
26.09.2015 மாலை 3 மணி
(மாலை 3.00 - 5.30 வரை இடம்பெறும்)
வடமாகாணத்தின் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி
(இன்னும் சில அனுமதிகள் மட்டுமே)

E-CITY College of English
City & Guilds
இல-372, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106, 0212217898, 0773400418
(சி-2282)

பணிநிலை வேண்டுகை

கணனி பக்க வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

நேரச்சு பழகுனர் (ஆண்)
Offset Machine Helpers

புத்தகம் கட்டுனர் (ஆண்/பெண்)
Book Binder
(சி-2284)

முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்
23ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை
நேரில் வரவும்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உளுக்கு, வீக்கம், ஊமை உளுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-2281)

தேவை

ஈரல் மாற்றுச் சிகிச்சைக்கு (Liver transplantation)ஈரல் தேவைப்படுகிறது. வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-2269)

தொடர்புகளுக்கு
077 8792384

மற்றுமொரு
கனடா விசா வென்றோம்!
Canada Visit Visaக்கு 2 முறை சுயமாக விண்ணப்பித்துவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சிகரம் மூலம் மீள்விண்ணப்பம் செய்தவர் 6 மாத Multiple Entry Visa வென்றார்.
சுயமாகவோ அல்லது வேறு முகவர் மூலமாகவோ விசா விண்ணப்பம் செய்து நிராகரிக்கப்பட்டுள்ளதா?

கவலையை விடுங்கள்
நாங்கள்
மீளப் பெற்றுத்தருகிறோம்!
SIKARAM
Any Visa to Any Country
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட சட்ட வல்லுநர்கள் ஊடாக 100% உத்தரவாதமான சேவை
எந்தவொரு நாட்டுக்குமான
எந்த வகை விசா என்றாலும்
STUDENT VISA - SPOUSE VISA - DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA
(சி-2285)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாண
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
நூற்றாண்டு விழா
செப்ரெம்பர் 28, 29, 30ஆம் திகதிகளில்
(இ)


முதலாம் ஆண்டு நினைவுநாள்

அமரர் அருந்தவராசா கிருஷாந்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 - 01 - 1997 |  | 05 - 09 - 2014 |

எமது குடும்பத்தின் குலவிளக்கே
எம் வாழ்வின் ஒளி விளக்கேற்றிய
அன்புத் தெய்வமே எங்கள் வாழ்வில்
எத்தனைகோடி இன்பங்கள் வந்தாலும்
அது அத்தனையும் நீயாகுமா?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகளை எப்போதும்
சுமந்து நிற்போம்

கருகம்பண் புலோலி தெற்கு, புலோலி

நீர் விழிகளுடன் குடும்பத்தினர்.

(சி-2286)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.